# பேனா குரல்
# PENA KURAL

தமிழ் மாதஇதழ்
Tamil Monthly

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 05 | மார்ச் 2023 | விலை: ₹ 20/- | ஆண்டு சந்தா: ₹ 240/- | சென்னை |
| Volume: 01 | Issue: 05 | March 2023 | Price: ₹ 20/- | Annual Aubscription: ₹ 240/- | Chennai |




## சிறந்த உள்கட்டமைப்பின் உதாரணம்!
## 2000 ஆண்டு பழமையான கல்லணை...

**பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்**

www.penakural.com







# இன்னோரா என்சுலின் ஜூஸ்

நீரிழிவு என்பது இரத்ததில் சர்க்கரையின் அதிகரிப்பை கொடுக்கக்கூடிய ஒன்று. உடல் உற்பத்தி செய்யாத அல்லது உற்பத்தி செய்த இன்சுலினைப் பலனளிக்கும் விதத்தில் பயன்படுத்த இயலாத நிலைமையில், இந்நோய் உள்ளவர்களின் இரத்ததில் அதிக அளவு சர்க்கரை இருக்கும். மனித உடம்பில் சர்க்கரையை உடலுக்குத் தேவையான சக்தியாக மாற்ற இன்சுலின் அத்தியாவசியமாக உள்ளது. குறிப்பாக, இரத்த சர்க்கரை அளவு சரியாகக் கட்டுப்படுத்தப்படவில்லை எனில் மிகச் சிக்கலான நிலமைகளும் உருவாகலாம்.

**அறிகுறிகள்:** இருதய நோய், பக்கவாதம் நெடுநாள் சிறுநீரகக் கோளாறு, நீரிழிவு நோயினால் ஏற்படும் கால் புண், நீரிழிவு நோயினால் ஏற்படும் கண் நோய் என்பன ஏற்படலாம்.

இரத்ததில் அதிக அளவு சர்க்கரை இருப்பது அடிக்கடி சிறுநீர் கழித்தல், அளப்பரிய அதிகமாக தாகமெடுத்தல், அளப்பரிய பசி ஆகிய மரபார்ந்த அறிகுறிகளை உருவாக்குகின்றது.

**தடுப்பு முறைகள்:** ஆங்கில மருந்துகள் உடனே குளுகோசின் அளவைக் குறைத்தாலும் அதனால் ஏற்படக்கூடிய பக்க விளைவுகள் அதிகம். இயற்கையான மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்துகள் மிகவும் சிறந்தது.

**இன்னோரம் பயோஜெனிக்ஸ்,** இயற்கை மூலிகை பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட, உயர் இரத்த சர்க்கரை நோயாளிகள், உமிழ்நீர் சுரப்பு இல்லாமல் இருக்கும் நோயாளிகள் மற்றும் எலும்பு மற்றும் மூட்டுகளில், தேய்மானம் மற்றும் இயக்க பிரச்சினை உள்ள நோயாளிகளுக்காகவே சிறப்பான முறையில் இந்த மூலிகை மருந்துகளை தயாரித்திருக்கிறோம்.

**இன்னோரா என்சுலின்** சர்க்கரை கொள்ளி (COSTUS PICTUS) இலையிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது, இது (Spiral Ginger Juice) என்றும் அழைக்கப்படுகிறது.

- ☼ என்சுலின் ஒரு சிறந்த சுவையானது, பாதுகாப்பானது மற்றும் பயனுள்ள ஜூஸ். இது உயர் இரத்த சர்க்கரைக்கும், இன்சுலின் சுரக்கும் செல்களுக்கும் தூண்டுதலை ஊக்குவிக்கிறது.
- ☼ சர்க்கரை கொள்ளி இலை ஜூஸ் எடுத்து கொண்டபின், இரத்த குளுக்கோஸ் அளவுகள், இருதய செயல்பாடுகள், கொலஸ்ட்ரால் அளவுகள், இரத்த அழுத்தம், உடல் எடையை சீராகவும் வைக்கிறது.
- ☼ காஸ்டஸ் பிக்டஸில் அதிக அளவு ஃபிளாவனாய்டுகள் (FLAVONOIDS) மற்றும் டெர்பெனாய்டுகள் (TERPENOIDS) உள்ளன, ஆக்ஸிஜனேற்றிகள் (ANTI-OXIDANTS) தீங்கு விளைவிக்கும் ஃப்ரீ ரேடிக்கல்களிலிருந்து (FREE RADICALS) ஆக்ஸிஜனேற்ற செல் சேதத்திற்கு எதிராக பாதுகாப்பை வழங்குகின்றன.
- ☼ இன்னோரா என்சுலின் ஜூஸ் ஆரோக்கியமான, இரத்த குளுக்கோஸ் அளவை அதிகரிக்கிறது.
- ☼ இன்னோரா என்சுலின் ஜூஸில் புரோட்டீன், இரும்புச்சத்து, மெக்னீசியம் மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் நிறைந்துள்ளன.
- ☼ இன்னோரா என்சுலின் சர்க்கரை மற்றும் கார்போஹைட்ரேட் (CARBOHYDRATES) உறிஞ்சுதலைக் குறைக்கிறது.

**இன்னோரம் பயோஜெனிக்ஸ் (INNORAM BIOGENICS) தயாரிப்புகள் இந்தியாவிலும் வெளிநாட்டிலும் பல நோயாளிகளால் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.**

# பேனா குரல்

**PENA KURAL**

**தமிழ் மாத இதழ்**

R.Dis. No.: 939/2022

மலர்: 01 இதழ்: 05 மார்ச் 2023 விலை: ₹20/-

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர் : **NV சிவசங்கர்**

ஆசிரியர்: **ராதிகா S**, B.E.,

நிர்வாக ஆசிரியர்: **P. கார்த்திகேயன்**

துணை ஆசிரியர்கள்:

**துரை. சந்துரு, N.மதிவாணன், M.சந்திரசேகர் K.அழகர்சாமி, V.அய்யனார், P.ஸ்டாலின் B.நாராயணசாமி, T.சிவக்குமார், M.அறிவுநிதி**

தலைமை நிருபர்கள்:

**R.ஹரிகிருஷ்ணன், B.மணிகண்டன், B.நவின்குமார், தங்கராஜ், K.மாரிதுரை, M.திலிப் குமார், P.அசோக்குமார், P.ஜேசுராஜ், J.தனசேகர், K.சுபுலட்சுமி**

நிருபர்கள்:

**B.சரவணன், தமிழ் மணி, U.சரவணன், K.கலைமணி, D.பாமா, , ஜெபசீலன், N.விஜயலட்சுமி, தமிழ் வீரன், A.ஐயப்பன், அன்பு மணி, R.பிரகாஷ், G.தீபக், V.கண்ணபிரான், தமிழினி, T.அஜி**

புகைப்பட நிருபர்கள் :

**V. கவியரசன், K. மிதுன் சாய்**

ஓவியங்கள்: **V. சந்தோஷ் குமார்**

சட்ட ஆலோசகர்: **G. நாகராஜ்**, B.Sc., LLB.,

**இதழ் வடிவமைப்பு:** *RS Sun Printz*



நிர்வாக அலுவலகம்:

**பேனா குரல்**
**3/885, பிள்ளையார் கோவில் தெரு,**
**மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,**
**தமிழ் நாடு, இந்தியா - 600097.**

தொடர்புக்கு:

**044-35906002, 9962245338**
**info@penakural.com**
**penakural@yahoo.com**
**www.penakural.com**



⁕ பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.
⁕ பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது. ⁕




# பெண் விவசாயிகளுக்கு அங்கீகாரம் கிடைக்கிறதா?

தமிழகத்தில் தனியாக வாழும், வாழ்வாதாரம் தேவைப்படும் பெண்களின் எண்ணிக்கை அதிகம். அவர்கள் விவசாயம் செய்ய, முடிவுகளை எடுக்க, நிலம் தேவைப்படுகிறது. விவசாயம் சம்பந்தப்பட்ட ஏறக்குறைய அனைத்து பணிகளையும் பெண் விவசாயிகள் முழுமையாக செய்து வரும் நிலையில், கிராமப்புற பொருளாதாரத்தில் அவர்களுக்கான இடம் குறைந்து வருகிறது. விவசாயத்தை ‘ஆண்மையப்படுத்துதல்’ என்று செயல்பாட்டாளர்களினால் விவரிக்கப்படும் போக்குகளினால், நில உரிமையை அடிப்படையாக கொண்டுள்ள இந்த கிராமப் பொருளாதாரத்தில் இருந்து பெண்கள் வெளியேற்றப்படுவது அதிகரித்து வருகிறது.

இது பல முனைகளில் நடந்து வருகிறது; சுமார் 74 சதவீத கிராமப்புற பெண்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தாலும், அவர்களில் 12 சதவீதத்தினரின் பெயர்களில் மட்டுமே நிலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தமிழக பெண் விவசாயிகள் உரிமைகளுக்கான கூட்டமைப்பு நடத்திய ஆய்வு கூறுகிறது. தமிழ்நாட்டில் 3.15 லட்சம் பெண்கள் விவசாயத்தில் (விவசாய பணிகளையும் சேர்த்து) ஈடுபட்டுள்ளதாக விவசாய கணக்கெடுப்பு கூறுகிறது.


எந்த பயிர்களை, எந்த முறையில் பயிர் செய்ய வேண்டும் போன்ற விவகாரங்களில் பெரும்பாலும் ஆண்கள்தான் முடிவு செய்கின்றனர். சந்தையில் விதைகளை வாங்க செல்லும் ஆண்கள், விற்பனையாளர்கள் மற்றும் தொழில் துறை சார்ந்த முடிவுகளை எடுப்பதால், முடிவு எடுப்பதில் இருந்து பெண்கள் தற்செயலாக வெளியேற்றப்படுகின்றனர். விவசாய பணிகள் எந்திரமயாக்கப்படுவதாலும் (விதைத்தல் போன்றவை), களைக்கொல்லி பயன்பாட்டினாலும் பெண்களுக்கான வேலை வாய்ப்புகள் குறைந்துள்ளது. நிலமற்ற ஏழை பெண்களுக்கு, கைகளினால் களையெடுத்தல் பணிகள்தான் வருவாய் அளிக்கும் முக்கிய பணியாக இருப்பதால், அவர்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கையில் பெண்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பெண்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதே இதற்கு முக்கிய காரணம் என்கிறார். “விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க அரசு திட்டமிட்டிருப்பதால், பெண்களையும் விவசாயிகளாக கருத வேண்டும் என்று அரசாங்கத்திடம் சுட்டிக் காட்டியுள்ளோம். ஆண்களும், பெண்களும் சமமாக நடத்தப்படும் போது, உற்பத்தி திறன் 40 சதவீதம் வரை அதிகரிப்பதாக ஆப்பிரிக்காவில் நடத்தப்பட்ட ஆய்வுகள் கூறுகின்றன.

அமைப்பு ரீதியான அதிகாரங்களை பெண்கள் அடைவதுதான் அதிக முக்கியமான விஷயம் என்று செயல்பாட்டாளர்கள் கூறுகின்றனர். பெண் விவசாயிகளுக்கு அங்கீகாரம் அளித்து ஊக்குவிக்க வேண்டும்.

– **ராதிகா சிவசங்கர்**, ஆசிரியர்






# இந்திய எழுத்தாளர் பெருமாள் முருகனின் நாவல்

## சர்வதேச புக்கர் புக்கர் பரிசுக்கு பரிந்துரை

சர்வதேச புக்கர் பரிசின் பரிசீலனைப் பட்டியலில் பெருமாள் முருகன் எழுதிய பூக்குழி நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பான Pyre நாவல் இடம்பெற்றுள்ளது. தமிழில் எழுதப்பட்ட நாவல் ஒன்று இந்தப் பட்டியலில் இடம்பெறுவது இதுவே முதல் முறை. சர்வதேச புக்கர் பரிசு ஒவ்வொரு ஆண்டும் ஏதாவது ஒரு மொழியில் எழுதப்பட்டு, ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, பிரிட்டனிலும் அயர்லாந்திலும் பதிப்பிக்கப்படும் சிறுகதைத் தொகுப்பிற்கோ, நாவலுக்கோ வழங்கப்படுகிறது. பரிசைப் பெறும் நாவலுக்கு விருதுத் தொகையாக 50 ஆயிரம் பவுண்டுகள் வழங்கப்படும். அதை கதாசிரியரும் மொழிபெயர்ப்பாளரும் சமமாகப் பகிர்ந்து கொள்வார்கள்.

சர்வதேச புக்கர் பரிசு அறிவிக்கப்படுவதற்கு முன்பாக, அந்தப் பரிசுக்கான பரிசீலனைப் பட்டியலில் இடம்பெற்றிருக்கும் நாவல்களின் பட்டியல் வெளியிடப்படும். அது Longlist என அழைக்கப்படுகிறது. இந்தப் பட்டியலில் இடம்பெறுவதே, மிகப் பெரிய கௌரவமாகக் கருதப்படுகிறது. 2023ஆம் ஆண்டின் சர்வதேச புக்கர் விருதுக்கான பரிசீலனைப் பட்டியல் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. 11 மொழிகளில் எழுதப்பட்ட 13 நாவல்கள் இந்த முறை அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

தமிழில் எழுதப்பட்டு மொழிபெயர்க்கப்பட்ட Pyre, சீன மொழியில் எழுதி மொழிபெயர்க்கப்பட்ட Ninth Building, ஸ்வீடிஷ் நாவலான A System So Magnificent It Is Blinding உள்ளிட்ட நாவல்கள் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. தமிழ், பல்கேரியா, கேடலான் ஆகிய மொழிகளில் எழுதப்பட்ட புனைவுகள் இந்த பரிசீலனைப் பட்டியலில் இடம்பெறுவது இதுவே முதல்முறை.

பெருமாள் முருகனின் 'பூக்குழி' நாவல் கல்கி வார இதழில் தொடராக வெளிவந்த ஒரு நாவல். காலச்சுவடு இதனை நூலாக வெளியிட்டது. தனது கிராமத்தைவிட்டு வெளியேறி வேலைபார்க்கும் இளைஞனான குமரேசன், தான் தங்கியிருக்கும் இடத்திற்கு அருகில் வசிக்கும் சரோஜாவைக் காதலித்து, திருமணம் செய்துகொள்கிறான். இருவரும் வெவ்வேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள். சரோஜா பட்டியலினத்தைச் சேர்ந்த பெண்.

ஒரு கட்டத்தில் தன் சொந்த ஊருக்கு குமரேசன் சரோஜாவை அழைத்து வருகிறான். கடுமையான ஏழ்மையில் வாழ்ந்தாலும் ஜாதிப் பெருமிதத்துடன் வாழும் குமரேசனின் தாயார்,


இந்தத் திருமணத்தை ஏற்கவில்லை. தன் தாயிடமும் ஊராரிடமும் தனது மனைவியின் ஜாதியைச் சொல்லாமல் தொடர்ந்து மறைத்து வருகிறான் குமரேசன். ஒரு தருணத்தில் சரோஜாவின் ஜாதி தங்களைவிட சமூகப் படிநிலையில் கீழே உள்ள ஜாதி எனத் தெரிந்துவிட, ஊரே அவளைக் கொல்ல முயல்கிறது. பிறகு சரோஜாவும் குமரேசனும் என்ன ஆனார்கள் என்பதே இந்த நாவலின் மீதிக் கதை.

"ஆணவக் கொலைகளில் பல கோணங்கள் உண்டு. ஆண் பெண் ஆகிய இருவரில் யார் ஒடுக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எதுவும் நடக்கலாம். கடைசியில் அந்தப் பெண் என்ன ஆனாள் என்பதைத் தெளிவில்லாமல், நம்பிக்கையூட்டும்விதமாக முடித்திருப்பேன். நான் இந்த நாவலைக் கல்கியில் தொடராக எழுதிக்கொண்டிருந்தபோதுதான் தருமபுரியில் இளவரசனின் மரணம் நிகழ்ந்தது. ஆகவே, இந்த நாவல் புத்தகமாகும்போது, அதை இளவரசனுக்கே சமர்ப்பித்தேன்" என கூறினார் பெருமாள் முருகன்.

தமிழில் எழுதப்பட்ட நாவல் இந்தப் பட்டியலில் இடம்பெறுவது தமிழுக்கே மிக முக்கியமான விஷயம் என்கிறார் அவர். "நம் படைப்புகளை ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் கொண்டு செல்லும்போது மட்டும்தான் இப்படியான அங்கீகாரம் கிடைக்கும். அந்த அளவுக்கு தகுதியும் தரமும் நம்மிடம் உள்ளது. ஆனால், அப்படிக் கொண்டுசெல்வதில் நம்மிடம் பெரும் சுணக்கம் இருக்கிறது. அதைக் கடந்து கொண்டுசென்றால் இம்மாதிரியான அங்கீகாரம் நிச்சயம் கிடைக்கும்" என்கிறார் பெருமாள் முருகன்.

'பூக்குழி' நாவலை அனிருத் வாசுதேவன் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க, முதலில் பென்குயின் வெளியிட்டது. பிரிட்டனில் இதனை புஷ்கின் பிரஸ் வெளியிட்டது. இந்த நாவலை, பிற மொழிகளுக்குக் கொண்டு செல்வதில் முக்கியப் பங்கு வகித்தவர் 'பூக்குழி' நாவலை தமிழில் வெளியிட்ட காலச்சுவடு பதிப்பகத்தின் பதிப்பாளரான கண்ணன்.

"எந்த ஒரு படைப்பும் இந்தியாவில் தமிழிலும் ஆங்கிலத்திலும் பிரசுரமானாலும் இந்தப் பட்டியலில் இடம்பெற வாய்ப்பில்லை. அந்தப் படைப்பு பிரிட்டனிலும் அயர்லாந்திலும் பதிப்பிக்கப்பட வேண்டும். ஆகவே, இது தனியாக நடக்காது. புரொஃபஷனல்கள் இந்த




முயற்சியில் இணைய வேண்டும். பதிப்புரிமைகள் சரியான முறையில் விற்கப்பட வேண்டும். அப்படிச் செய்யும்போதுதான் இதுபோன்ற பரிசுப் பட்டியலில் இடம்பெற முடியும்" என்கிறார் கண்ணன்.

2022ஆம் ஆண்டு மே 1ஆம் தேதியிலிருந்து 2023 ஏப்ரல் 30ஆம் தேதி வரை வெளியான 134 புத்தகங்களில் இருந்து இந்தப் பட்டியல் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து 6 புத்தகங்கள் தேர்வு செய்யப்பட்டு (Short-list) ஏப்ரல் 18ஆம் தேதி லண்டன் புத்தகக் கண்காட்சியில் அறிவிக்கப்படும். மே 23ஆம் தேதி லண்டனில் நடக்கும் விழாவில் தி இன்டர்நேஷனல் புக்கர் பரிசைப் பெறும் புத்தகம் அறிவிக்கப்படும். கடந்த ஆண்டு கீதாஞ்சலி ஸ்ரீ எழுதி, டெய்சி ராக்வெல் மொழிபெயர்த்த Tomb of Sand நாவலுக்கு இந்தப் பரிசு கிடைத்தது. இந்தியில் எழுதப்பட்ட நாவல் ஒன்றுக்கு இந்தப் பரிசு கிடைத்தது, அதுவே முதல் முறை.

– நா வீ சிவசங்கர்




உலகம் மனிதனுக்கு மட்டுமானது அல்ல; அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானது; உரிமையானது. அதனால்தான், “எல்லா உயிர்களும் இன்புற்று வாழ வழிவகை செய்திடல் வேண்டும்“ என்றார் இராமலிங்க அடிகளார்.

அப்படியிருக்கும் போது, மனிதனோடு மனிதனாகப் பின்னி பிணைந்து குடும்பத்தில் ஒருவராக வாழ்கிற பறவையினம்தான் சிட்டுக்குருவி. மேலும் மனித இனத்னோடு அடைக்கலம் ஆவதால், அவற்றை அடைக்கலாங் கூருவி என்றும் கூறுவர்.

சிட்டுக்குருவி வீடுகளில் கூடுகட்டினால், அக்குடும்பத்தில் தலைமுறைகள் வாழையடி வாழையாக தழைத்தோங்கும் என்கிற அசாத்திய நம்பிக்கை இன்றளவும் கிராமங்களில் வசிக்கும் மக்களின் மனங்களில் ஆழமாக வேரூன்றி நிற்கின்றன. அதனால் தான், வீடுகளில் குருவி கூடு கட்டினால், அவற்றை ஒருபோதும் கலைக்கமாட்டார்கள்.

பெரும்பாலும் சிட்டுக்குருவியானது வீடுகளில் உள்ள பரண், மாடம், விட்டம் மற்றும் ஓடுகளின் இடுக்குகளில் உள்ள இடைவெளிகளில் கூடு கட்டி வசிக்கும். மேலும் இன்றைய காலகட்டத்தில் நகர்ப் புறங்களிலும், மாநகரங்களிலும் கான்கிரீட் வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. மேலும் இதுபோன்ற பெரும்பாலான குடியிருப்புகளில் வெளிக்காற்றானது; வீட்டுக்குள் வராத வகையில் குளிர்சாதன வசதியைப் பெரும்பாலோர் பயன்படுத்துவதால், சிட்டுக்குருவிகள் கூடுகட்டி குஞ்சு பொரிக்க போதிய வசதிகள் இல்லாமல் போய்விட்டது என்பதே மறுக்கமுடியாத உண்மை.

அதனால், சிட்டுக்குருவியானது தன் இனப்பெருக்கத்துக்கான வாழ்வியல் சூழலை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறது. குறிப்பாக சொல்வதென்றால், கடந்த 20ஆண்டுகளில் சிட்டுக்குருவிகளின் இனங்களில் 60சதவிகிதம் அழிந்துவிட்டது என்கிற அதிர்ச்சியூட்டும் தகவல்கள் புள்ளிவிவரங்களுடன் வெளியாகியுள்ளன.

அவற்றைத் தடுத்து நிறுத்தி, அப்பறவை



இனத்தைப் பாதுகாக்கவேண்டும் என்கிற நல்ல எண்ணத்தோடு, 2010ஆம் ஆண்டு மார்ச் 20ஆம் தேதியை உலக சிட்டுக்குருவி தினமாக ஐ.நா. அங்கீகரித்தது. மேலும் மனிதர்கள் மேற்கொள்ளும் இயற்கைக்கு முரணான சுற்றுச்சூழல் நடவடிக்கையானது சிட்டுக்குருவியின் அழிவுப் பாதைக்கு அடித்தளமிட்டுள்ளன என்றால் அது மிகையாகாது!

செல்போனின் உபயோகம் அதிகரிக்க தொடங்கிய நாள்முதல் சிட்டுக்குருவிகளின் அழிவும் அதிகரிக்க தொடங்கிவிட்டன. அதற்கு முக்கியக் காரணமாக கூறப்படுவது ; செல்போன் டவர்களில் இருந்து வெளியேறும் அதிகபட்சமான கதிர்வீச்சானது சிட்டுக்குருவியின் கருவையே சிதைக்கும் அளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதுதான். ஒருவேளை அது முட்டையிட்டாலும் அதன் கருவானது முழு வளர்ச்சியை அடைவதில்லை.. அதனால் சிட்டுக்குருவி இனமானது நாளுக்குநாள் அழிவுப்பாதையை நோக்கி செல்கின்றன.

இதில் வருத்தத்துக்குரிய செய்தி என்னவென்றால்; 13ஆண்டுகள் ஆயுளைக் கொண்ட சிட்டுக்குருவியானது 5ஆண்டுகளுக்குள் தன் வாழ்நாளை முடித்துக் கொள்கிறது என்பதுதான்.

இனியாவது பிற உயிரினங்கள் பாதிக்கப்படாத வகையில் வாழ்வியல் சூழலை அமைத்துக்கொள்ள மனித இனம் முன்வரவேண்டும். அப்போதுதான் இந்த பரந்து விரிந்த உலகம் மனித இனத்துக்கு மட்டும் சொந்தமானது அல்ல; எல்லா உயிரினங்களுக்கும் பொதுவானது என்பதை உணர்த்த முடியும்; நிரூபிக்க முடியும். ஆகையால், மனிதனோடு மனிதனாகப் பின்னி பிணைந்து வாழும் சிட்டுக்குருவி இனத்தை அழிவுப்பாதையில் இருந்து மீட்டெடுக்க உலக சிட்டுக்குருவி நாளில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து உறுதியேற்போம்.

– B. **சரவணன்**



# 7 க்கு இவ்வளவு பெருமையா?

ஏழு என்பது, வேத மரபில் ஒரு முக்கிய எண். ஏழு என்பதற்கு முழுமை அல்லது பரிபூரணம் என பொருள்படும். ஏழு என்பது இந்தியப் பண்பாட்டில் சிறப்பிடம் பெற்ற எண் ஆகும். காலத்தைக் கணிக்கும் முறையில் எண் ஏழு பழங்கால மக்களிடையே மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்துள்ளது.

**எண் ஏழின் சிறப்புக்கள்:**

1. புதிய உலக அதிசயங்கள் மொத்தம் ஏழு, இது அறிவிக்கப்பட்ட தேதி 07/07/2007
2. எழு குன்றுகளின் நகரம் ரோம்
3. வாரத்திற்குமொத்தம் ஏழு நாட்கள்
4. மொத்தம் ஏழு பிறவி
5. ஏழு சொர்க்கம் (குரான்)
6. ஏழு கடல்கள் 'கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகுத்தி குறுகத் தெரித்த குறள்' ஔவையார்.
7. வானவில்லின் நிறங்கள் (VIBGYOR)
8. ஏழு வானங்கள். (Qur'an
9. ஏழு முனிவர்கள் (Rishi)
10. ஏழு ஸ்வரங்கள் (ச,ரி,க,ம,ப,த,நி)
11. ஏழு கண்டங்கள்
12. ஆதி மனிதன் Adam மற்றும் Eve ஆகியோரின் பெயர்களில் உள்ள மொத்த எழுத்துக்களின் கூட்டுத்தொகையின் எண்ணிக்கை ஏழு.
13. ஒவ்வொரு திருகுறளிலும் உள்ள சீர்கள் ஏழு. அதுமட்டுமா, ஒன்றே முக்கால் அடிக் குறளைக் காற் காற் பகுதியாக வெட்டிப் பாருங்கள் அதுவும் ஏழுபகுதிகளாக வரும்.
14. கண்ணுக்கு புலப்படக் கூடிய கோள்களின் எண்ணிக்கை ஏழு (Sun, Moon, Mercury, Mars, Jupiter, Venus and Saturn)
15. திருக்குறளில் மொத்தம் 1330 குறட்கள், 133 அதிகாரங்கள் உள்ளன. அதனுடைய கூட்டுத்தொகையும் ஏழு.
16. மேலுலகம் ஏழு
17. கீழுலகம் ஏழு

நுண்ணறிவாய் உலகாய் உலகு ஏழுக்கும் எண்ணறிவாய் நின்ற எந்தை பிரான் தன்னைப் பண் அறிவாளனைப் பாவித்த மாந்தரை விண் அறிவாளர் விரும்புகின்றாரே திருமூலர் பாடல்

18. திருக்குறளில் "கோடி' என்ற சொல் ஏழு இடங்களில் இடம்பெற்றுள்ளது



19. மொத்தம் ஏழு தாதுக்கள்
20. ஏழு செவ்விய போரியல் நூல்கள் சீனா
21. ஏழானது மிகப்பெரிய ஓரிலக்கா பகா எண் (Prime Number) ஆகும்.
22. ஏழு புண்ணிய நதிகள்
23. இராமாயணத்திலுள்ள மொத்த காண்டங்களின் எண்ணிக்கை ஏழு
24. அகப்பொருள் திணைகள் ஏழு
25. புறப்பொருள் திணைகள் ஏழு
26. சூரிய பகவானின் ரதத்திலுள்ள குதிரைகளின் எண்ணிக்கை ஏழு
27. கடை ஏழு வள்ளல்கள்
28. சப்த நாடி (சமஸ்கிருதத்தில் சப்த என்றால் ஏழு)
29. "திருவள்ளுவர்" எழுத்துக்களின் கூட்டுத்தொகையும் ஏழுதான்
30. ஏழு அதிர்ஷ்ட தெய்வங்கள் ஜப்பான்
31. ஏழு மலையான் திருப்பதி, ஆந்திரா
32. மனிதனுடைய தலையிலுள்ள ஓட்டைகளின் எண்ணிக்கை ஏழு
33. உடலை கட்டுப்படுதும் சக்கரங்கள் ஏழு.
34. பெண்களின் பல்வேறு பருவங்கள் ஏழு (பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண்)

– **தமிழ் வீரன்**

# சர்வதேச வனங்கள் தினம் மார்ச் 21

## வனங்களின் முக்கியத்துவம் பற்றி தெரிந்து கொள்வோம்!




வனங்கள், உலகின் நுரையீரல்களாக இருக்கின்றன. ஏனெனில் மரங்கள் தான், பூமியில் வாழும் அனைத்து ஜீவராசிகளும் சுவாசிக்க ஆக்ஸிஜனை வழங்குகிறது. அதேபோல, உயிரனங்கள் வெளியேற்றும் கார்பன் டை ஆக்சைடை உள்வாங்கி கொண்டு, உயிரனங்கள் நடமாட ஏற்ற இடமாக மாற்றியுள்ளது.

அதுமட்டுமின்றி, பூமியின் நிலப்பரப்பை தாங்கி பிடிக்கும் தூங்கவும் மரங்கள் உள்ளன. காண மழை, பெருவெள்ளம் போன்றவற்றால் ஏற்படும், மண் அரிப்பை தடுக்கிறது.

அதுமட்டுமின்றி, மழை பொழிவிற்குமே வனங்களும், மரங்களும் முக்கியமான ஒன்று.

இதோடு, மாசுபட்ட காற்றை சுத்திகரிக்கவும், பறவைகள் மற்றும் விலங்குகளுக்கு வீடாகவும், பல நேரங்களில் உணவாகவும் இருக்கிறது மரங்களும், வனங்களும்.

அப்படிப்பட்ட காடுகளின் முக்கியத்துவத்தை, மக்களுக்கு வலியுறுத்தவும், அவற்றை அழிவிலிருந்து பாதுகாக்கவும்தான், இந்த நாள்.

வனங்கள் பாதுகாப்பு தினத்தின் வரலாறும், இந்த ஆண்டின் கருப்பொருளும்

முதல் முதலாக, டிசம்பர் 20, 2006 அன்று, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை (UNGA), 2011 ஆண்டை, 'சர்வதேச காடுகளின் ஆண்டு' ஆக அறிவித்தது. புவி வெப்பமடைதல், மற்றும் காடுகளின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.


அதை தொடர்ந்து, டிசம்பர் 21, 2012 அன்று, UNGA, ஆண்டு தோறும், மார்ச்21 அன்று, 'சர்வதேச காடுகளின் தினம்'ஆக கொண்டாட முடிவெடுத்தது.

ஒவ்வொரு ஆண்டும், இந்த தினத்திற்கென்று ஒரு தீம் உண்டு. அதேபோல இந்த ஆண்டு, "காடுகள் மற்றும் ஆரோக்கியம்" எனும் தீமை தேர்ந்தெடுத்துள்ளனர். CPF எனப்படும் காடுகள் சார்ந்த தன்னார்வ நிறுவனம் தான், ஒவ்வொரு ஆண்டும், இந்த சர்வதேச வன பாதுகாப்பு நாளின் தீமை தேர்வு செய்வர்.

– K. சுப்பு லட்சுமி

# சிறந்த உள்கட்டமைப்பின் உதாரணம்! 2000 ஆண்டு பழமையான கல்லணை...

## பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்






உள்கட்டமைப்பு தொடர்பான கருத்தரங்கு ஒன்றில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் கல்லணை சிறந்த உள்கட்டமைப்பிற்கான உதாரணமாகக் காட்டினார். மேலும். 2000 ஆண்டுகள் பழமையான கல்லணை அப்பகுதிக்கு இன்னும் உதவுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ள உள்கட்டமைப்புத் துறை திட்டங்களின் முக்கியத்துவம் குறித்து விளக்கம் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாகக் கலந்து கொண்டார்.

அப்போது நமது நாட்டில் கொண்டு வரப்பட்டுள்ள பல முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்கள் குறித்து விளக்கிய பிரதமர் நரேந்திர மோடி, தமிழ்நாட்டில் இருக்கும் கல்லணை குறித்தும் சில முக்கிய கருத்துகளைத் தெரி வித்தார்.

அந்த கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, "நாட்டின் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான முதலீடுகளுக்கு முந்தைய அரசுகள் தடையாக இருந்தன. அவை இப்போது நீக்கப்பட்டுள்ளன. நமது நாட்டில் வறுமை எப்போதும் இருக்கும் என்ற மனநிலையை அகற்றுவதில் நமது அரசு வெற்றி பெற்றுள்ளது.. அதேபோல், 2014க்கு முன் ஆண்டுக்கு 600 கிமீ ரயில் பாதை மட்டுமே மின் மயமாக்கப்பட்டு வந்தது. இப்போது அது ஆண்டுக்கு 4000 கிமீ என்று எட்டியுள்ளது. அதேபோல நாட்டில் இருக்கும் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களின் எண்ணிக்கையும் இரு மடங்காக அதிகரித்துள்ளது.

**உள்கட்டமைப்பு**

உள்கட்டமைப்பு மேம்பாடுதான் நாட்டின் பொருளாதாரத்தின் உந்து சக்தியாக உள்ளது. இதே பாதையை நாம் பின்பற்றினால், 2047க்குள் வளர்ந்த நாடாக மாறும் இலக்கை இந்தியா அடையும். இப்போது நாம் டாப் கியரில் வளர வேண்டும். பொருளாதார மற்றும் உள்கட்டமைப்புத் திட்டத்தை வளர்ச்சியுடன் ஒருங்கிணைக்கப் பிரதமர் கதி சக்தி மாஸ்டர் பிளான் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளோம். இது உள்கட்டமைப்பு உள்ளிட்ட துறைகளில் இந்தியாவின் முகத்தையே மாற்றப்போகிறது. இத்திட்டத்தின் பலன்களை நாம் இப்போதே பார்க்கலாம்.

**முக்கியத்துவம்**

இந்த பட்ஜெட்டில், 100, முக்கியமான திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து,

75,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.. உள்கட்டமைப்பை மேம்படுத்த நாம் எடுத்துள்ள நடவடிக்கை மூலம் வரும் காலத்தில் ஒரு பொருளை ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்ல ஆகும் செலவு வரும் நாட்களில் மேலும் குறையப் போகிறது. இதன் இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருட்கள் எளிதாக எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்ல முடியும்.

**வரலாறு**

நாட்டில் உள்கட்டமைப்பை மேம்படுத்தத் தொடர்ச்சியாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. எந்தவொரு நாட்டின் நிலையான வளர்ச்சியிலும் உள்கட்டமைப்புக்குக் குறிப்பிடத்தக்கப் பங்கு உண்டு.. உள்கட்டமைப்பு தொடர்பான வரலாறு அறிந்தவர்களுக்கு நான் சொல்வது எந்தளவுக்கு உண்மை என்பது தெளிவாகவே புரியும். நீர்வழிப் பாதைகளிலும் நமது முன்னோர்கள் பல முக்கிய கட்டுமானங்களைச் செய்துள்ளனர். பனாரஸ் மலைத்தொடர் கொல்கத்தாவுடன் நேரடியாக நீர்வழிகள் வழியாக இணைக்கப்பட்டுள்ளன.

**கல்லணை**

தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் கல்லணை சிறந்த உள்கட்டமைப்பிற்கான உதாரணம். சோழ மன்னர்கள் கட்டிய இந்த கல்லணை 2000 ஆண்டுகள் பழமையானது. இத்தனை ஆண்டுகள் ஆன போதிலும், இந்த அணை இப்போதும் இயங்கி வருகிறது. இது பற்றி அறிந்தால் நீங்களே ஆச்சரியப்படுவீர்கள். கல்லணை போன்ற பழமையான ஒரு அணை இன்றும் கூட அங்குள்ள மக்களுக்கும் அப்பகுதிக்கும் வளர்ச்சியை வழங்கி வருகிறது" என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

– **ஆசிரியர்**

# ஆகாயத்தாமரையில் இருந்து இயற்கை எரிவாயு

ஆகாய தாமரைக்கு நீரை ஆவியாக்கும் தன்மை உண்டு. தண்ணீரில் மிதக்கும் இந்த தாவரம் தண்ணீரில் படர்ந்து வளர்வதன் மூலம் தொடர்ந்து வேகமாக பரவுகிறது.

மிக கனமாகவும், பசுமையான இலைகளை கொண்டிருக்கும் இந்த தாவரம் ஊதா நிறத்திலான பூக்களை கொண்டது. இதன் தண்டிலிருந்து புறப்படும் கிளைகள் விரைவில் புதிய செடியாக பரவும்.

இந்த தாவரம் நீர் நிலைகளில் தோன்றி விரைவில் பரவும். இவை அந்த தண்ணீரை எளிதில் ஆவியாக்குவதால் குளம் குட்டைகள் விரைவில் வறண்டுவிடும். எனவே விவசாயத்திற்கு மிகவும் ஊறு விளைவிக்கும் ஓர் தாவரமாக திகழ்கிறது.

ஆகாய தாமரையில் உள் அமைப்பு மற்றும் நார் போன்ற வேர்கள் தண்ணீரில் கலந்துள்ள உலோக வடிவிலான நச்சு பொருட்கள் எளிதில் உறிஞ்சி தன்னுள் சேமித்து வைத்துக் கொள்ளும். இதன் காரணமாக தண்ணீர் மாசு கட்டுப் பாட்டிலிருந்து பாதுகாக்கப் படுகிறது. மாசு நிறைந்த தண்ணீரில் காணப்படும் உலோகங்களான “”ஈயம்” “”அர்சனிக்” போன்ற நஞ்சு தன்மைகளை நீக்க விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சியில் ஆகாயத்தாமரை பயன்படுகிறது.

இயற்கை எரிவாயு தயாரிக்க ஆகாயத்தாமரை பயன்படும் என்கிற விஞ்ஞான பூர்வமான உண்மை கண்டறியப் பட்டுள்ளது.

கேவிஜசி (KVIC) எனப்படும் அரசு நிறுவனம் ஆகாயத் தாமரையிலிருந்து எரிவாயு தயாரிக்கப் பயன்படும் “”கலன்களை” அறிமுகம் செய்துள்ளது.

சாண எரிவாயு கலன்களிலிருந்து சிறிய மாறுதல்களுடன் இந்த எரிவாயு கலன்கள் வடிவமைக்கப் பட்டுள்ளது.

இயற்கை உரம் அதிக நார் தன்மை கொண்ட தண்டு பகுதிகளை ஆகாயத்தாமரை கொண்டிருப்பதால் இயற்கை அங்கக உரம் தயாரிக்க முடியும் என்பதும் நிரூபணமாகி உள்ளது.

2 முதல் 3 மாதங்களில் நன்கு மக்கும். ஆகாயத்தாமரை இயற்கை உரம் அதிக அளவில் நுண்ணூட்ட சத்துகள் கொண்டுள்ளது.

“சேப்ரோபிக் பாக்டீரியா’ ஆகாயத்தாமரையை 60 நாட்களில் மக்கவைத்து சிறந்த இயற்கை உரமாக மாற்ற வல்லது.

– **தங்கராஜ்**

# சுதந்திரத்திற்குப் பிறகு முதல் முறையாக பெண்கள் கல்லூரிக்குச் செல்லும் கிராமம்





டெல்லியில் இருந்து 100 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஹரியானா மாநிலம் கர்னால் மாவட்டத்தில் உள்ள தேவிபூர் கிராம பஞ்சாயத்தில், சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆன பிறகும், பெண்கள் கல்லூரிக்கு செல்லும் வாய்ப்பு கிடைக்கவில்லை. நைனாவிற்கு கல்லூரிக்குச் செல்ல வேண்டும் என்ற பிடிவாதம் அவருக்குள் இருந்தது. ”என் தந்தை மறுப்புத்தெரிவித்தபோது, நானும் ’படிக்க வேண்டும் என்றால் படிப்பேன்’ என்று பிடிவாதமாக இருந்தேன். நான் தவறு செய்தால் என் கழுத்தை அறுத்துக்கொள்ளுங்கள் என்று அவரிடம் சொன்னேன்” என்று நைனா கூறினார்.

கல்லூரிக்கு செல்ல வேண்டும் என்ற கனவு இருக்கும் கிராமத்தின் முதல் பெண் தான் அல்ல என்பது அவருக்குத் தெரியும். ஆனால் தன் கனவை நனவாக்குவதில் உறுதியாக இருந்த முதல் பெண் நிச்சயமாக அவர்தான். அவர் தனக்கும் தன்னுடைய 10 சகோதரிகளுக்கும் மட்டுமல்லாமல் கிராம பஞ்சாயத்தில் உள்ள பெண்கள் அனைவருக்கும் இந்த வழியை உருவாக்கினார்.

கிராமத்தின் மற்ற பெண்களைப் போலவே, நைனாவும் எப்படியோ பள்ளிப்படிப்பை முடித்தார். கல்லூரிக்குச் செல்வது என்பது அதிக சுதந்திரத்தை குறிக்கிறது. இதை குடும்பம் ஏற்றுக்கொள்ளவில்லை. பல நிபந்தனைகளுடன் மட்டுமே இதைப்பெற முடியும். யாரிடமும் அதிகம் பேசக் கூடாது, போன் பயன்படுத்தவே கூடாது. வீட்டிலிருந்து கல்லூரிக்கு, கல்லூரியில் இருந்து நேராக வீட்டுக்குச் வரவேண்டும் என்று கூறப்பட்டது என்று நைனா கூறுகிறார்.

மேலும், முழு கிராமத்திடமும் பெண்களை கல்லூரிக்கு அனுப்பாததற்கு ஒரு உறுதியான காரணம் இருந்தது. தேவிபூரிலிருந்து கல்லூரிக்கு செல்ல பொது போக்குவரத்து இல்லை. கிராமத்தில் இருந்து கல்லூரிக்கு செல்லும் வழியில் ஒரு பாலம் உள்ளது, அதை கடப்பது பெரும் சவாலாக இருந்தது.

**கடப்பதற்கு கடினமாக இருந்த பாலம்**

“பேருந்துகள் இல்லாததால் பெண்களை கல்லூரிக்கு அனுப்புவதை மக்கள் தவிர்த்து வந்தனர். பேருந்துக்காக நான்கு கிலோமீட்டர் தூரம் நடக்க வேண்டியதாயிற்று. பெண்களும் பயந்தனர். பாலத்தில் சிறுவர்கள் கேலியும், கிண்டலும் செய்வது வழக்கம்“ என்கிறார் அந்த கிராமத்தின் ஒரு பெரியவர். தினமும் இந்த பாலத்தில் சிறுமிகளுடன் ஏதாவது ஒரு சம்பவம் நடந்து கொண்டே இருக்கும். அவர்கள் மீது



சேற்றை வீசுவார்கள். சில சமயம் சிறுவர்கள் செங்கற்களை வீசிவிட்டு சென்று விடுவார்கள். அசிங்கமான வார்த்தைகளை பேசுவது அன்றாட விஷயமாக இருந்தது.

ஆனால் சிறுவர்கள் வெளியே சென்றுவர எந்தத்தடையும் இல்லை. ஆண் குழந்தை வேண்டும் என்ற ஆசை வீட்டில் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கிறது. இரண்டு மகன்கள் இருக்கும் நைனாவின் பெரியப்பா, "என் சகோதரனுக்கு ஒரு மகன் பிறக்க வேண்டும். அத்தகைய ஒன்று நடந்து, அவன் எனக்கு நிகரானவனாக ஆகவேண்டும் என்று நான் கடவுளை வேண்டிக்கொள்கிறேன்" என்கிறார்.

கல்லூரிக்குச் செல்லவேண்டும் என்ற நைனாவின் பிடிவாதத்தைப் பார்த்து வேறு சில பெண்களும் தைரியம் பெற்றனர். கிராமத்திற்கு பேருந்து வந்தால் இந்தப் பிரச்னை தீர்ந்துவிடும் என்று முடிவு செய்தனர். சிறுமிகள் ஒன்று சேர்ந்து ஊர் மக்களுடன் கூட்டத்தை கூட்டி அதையே சொன்னார்கள். இந்த சிறுமிகள் சேர்ந்து கடந்த ஆண்டு மே மாதம் கர்னாலின் தலைமை நீதிபதி ஜஸ்பிர் கௌருக்கு கடிதம் எழுதினார்கள்.

இந்த கிராம பஞ்சாயத்து பெண்கள் இன்று வரை கல்லூரிக்கு சென்றதில்லை என்பது ஜஸ்பிர் கௌருக்கு அதிர்ச்சியாக இருந்தது. ப்ரேக்த்ரூ (BREAKTHROUGH) என்ற என்ஜிஓ மூலம் அந்தப்பெண்கள் அவரிடம் வந்தபோது, அடுத்த நாளே பேருந்தை இயக்க அவர் உத்தரவிட்டார். சிஜேஎம் தேவிபூர் கிராமத்திற்குச் சென்றபோது, பேருந்துடன் கூடவே மக்களின் சிந்தனையிலும் சிக்கல் இருப்பதைக் கண்டார்.

"எத்தனை பெண்கள் வெளியில் போதைப்பொருள் உட்கொள்வதைப் பார்த்தீர்கள் என்று கிராமவாசிகளிடம் கேட்டேன். கிராமவாசிகள் பார்த்ததில்லை என்று சொன்னார்கள். பள்ளியை விட்டு ஓடிப்போன எத்தனை பெண்களைப் பார்த்தீர்கள் என்று கேட்டேன்? கிராமத்தினர் அதற்கும் பார்த்தில்லை என்று சொன்னார்கள்." "பிறகு ஏன் கல்லூரிக்குச் செல்வது பெண்களைக் கெடுக்கும் என்று நினைக்கிறீர்கள்? என்று கேட்டேன். கிராம மக்கள் எனக்குக் கீழ்ப்படிந்து பெண்களை பேருந்தில் கல்லூரிக்கு அனுப்ப ஒப்புக்கொண்டனர்."

"பாலத்தில் சம்பவங்களைத் தடுக்கவும், சிறுமிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் ஒரு PCR ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது இப்போது தினமும் ஒரு நாளைக்கு இரண்டு முறை முழு பகுதியையும் சுற்றி வருகிறது."

### நைனாவின் போராட்டத்தில் ஜோதியின் பங்கு



இன்று, பேருந்து வந்த பிறகு, நைனாவுடன் கூடவே தேவிபூர் கிராம பஞ்சாயத்தின் கீழ்வரும் நான்கு கிராமங்களைச் சேர்ந்த 15 சிறுமிகளும் கல்லூரிக்கு செல்ல முடிகிறது.இந்த பெண்கள் கல்லூரிக்கு வருவதில் ஜோதிக்கு மிகப்பெரிய பங்கு உண்டு. ஜோதி கர்னால் மாவட்டத்தில் உள்ள கடி கஜூர் கிராமத்தின் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர். "12வது படித்துவிட்டு கல்லூரிக்கு செல்ல நான் முடிவு செய்தபோது, எனது குடும்பத்தினரின் ஆதரவு கிடைத்தது. ஆனால், 12ம் வகுப்புக்குப் பிறகு நகரத்திற்குச் சென்று கல்லூரியில் சேர்ந்த ஒரே பெண் நான்தான். என் வயதுப் பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டது," என்று ஜோதி கூறினார்.

12ம் வகுப்புக்குப் பிறகு பெண்களால் கல்லூரிக்கு ஏன் செல்ல முடியவில்லை என்ற எண்ணம் பட்டப்படிப்பு படித்துக்கொண்டிருந்த காலத்தில் ஜோதியின் மனதில் எழுந்தது. கல்லூரியில் படிக்கும் போது, அரசு சாரா நிறுவனமான வனித்ரா அறக்கட்டளையில் அவர் சேர்ந்தார். கிராமத்தின் 'ஹரிஜன் சௌபாலில்' கற்றல் மையத்தைத் தொடங்கினார்.

ஒரு தலித் பெண் இப்போது 'மேடம்' ஆகி தங்கள் பெண்களுக்குப் பாடம் நடத்துகிறார் என்பதால் மேல்சாதி ஆண்கள் என்று அழைக்கப் படுபவர்கள் கோபமடைந்தனர். "ராஜ்புத் சிறுவர்கள் என்னைப் பற்றி கமெண்ட் அடிப்பார்கள். மாலையில் அவர்கள் மது அருந்திவிட்டு மையத்திற்கு வருவார்கள். தவறாக நடந்துகொள் வார்கள், பாடம் கற்பிக்க நீங்கள் யார் என்று சொல்வார்கள். என் பணி நிற்கக்கூடாது என்பதற்காக இந்த கற்றல் மையத்தை கிராமத்தில் உள்ள அரசு பள்ளிக்கு மாற்றினேன்," என்று ஜோதி குறிப்பிட்டார். தற்போது, கர்னால் மாவட்டத்தின் எட்டு கிராமங்களில் உள்ள பெண்களை உயர்கல்வியுடன் இணைக்க பிரேக்த்ரூவுடன் இணைந்து அவர் பணியாற்றி வருகிறார்.

கடி கஜூரின் ஷன்னோ தேவி, கல்லூரி அல்லது பள்ளியை பார்த்ததே இல்லை. ஆனால் அவரது பேத்தி சலோனி ஜோதியின் உதவியுடன் BA படிக்கிறார். "அவள் படித்தால் அடுத்த தலைமுறையும் முன்னேறும். திருமணம் எங்கு நடந்தாலும் அவள் மாற்றத்தை கொண்டு வருவாள். தன் சொந்த காலில் நின்றால் யாரிடமும் கைநீட்ட வேண்டிய அவசியம் இருக்காது," என்று பேத்தி பெற்ற கோப்பையை பார்த்தபடி ஷன்னோ கூறினார்.

பேருந்து வந்தபிறகு பெண்கள் கல்லூரிக்குச் செல்கிறார்கள். ஆனால் கிராம மக்கள் தங்கள் பெண்கள் இருட்டுவதற்குள் வீட்டிற்கு வந்துவிட வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்று தேவிபூரைச் சேர்ந்த பெரியவர் ஒருவர் கூறினார். கிராமத்திற்கு ஒரே ஒரு பஸ் மட்டுமே செல்கிறது, அதன் திரும்பும் நேரம் மாலை *6* மணி. இந்தப் பெண்கள் சீக்கிரம் வீட்டிற்குச் செல்லவேண்டும் என்றால் ஒவ்வொரு நாளும் சில வகுப்புகளுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும்.

பேருந்தின் நேர பிரச்சனை குறித்து நிர்வாகத்திடம் பேச முயற்சித்தோம். ஆனால் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை என்று தேவிபூர் கிராம பஞ்சாயத்தின் தற்போதைய தலைவர் கிரிஷன் குமார் தெரிவித்தார்.

"பெண்கள் அதிகளவில் கல்லூரிக்கு சென்று வெற்றி பெற வேண்டும். தேவிபூரில் *12*ம் வகுப்பு வரை பள்ளி கட்டடப்பட்டதில் இருந்தே பெண்களை பள்ளிக்கு அனுப்ப ஆரம்பித்துவிட்டனர். முன்பெல்லாம் *10*ம் வகுப்பு வரை தான் கற்பித்தோம்."என்றார் அவர்.

எனினும் அந்த சிறுமிகளை மீண்டும் சந்தித்து பேருந்து பிரச்சனைக்கு தீர்வு காண முயற்சிப்பதாக சிஜேஎம் ஜஸ்பிர் கௌர் எங்களிடம் கூறினார். ஆனால் கேள்வி என்னவென்றால், இவ்வளவு முயற்சிகள் இருந்தும், இன்றும் வெறும் *15* பெண்கள் மட்டுமே ஏன் கல்லூரிக்கு செல்கிறார்கள் என்பதுதான். பல பெண்களுக்கு இது இன்னும் கனவாகவே இருக்கிறது.

ஜனவரி மாதத்தின் ஒரு குளிரான காலை பொழுது. நைனாவும் அவள் சகோதரி ராக்கியும், நீலம் மற்றும் வெள்ளை நிற சீருடையில் பேருந்துக்காகக் காத்திருக்கிறார்கள்.ப் "இன்று நாங்கள் கல்லூரிக்கு செல்கிறோம், எங்கள் தங்கைகளும் வருங்காலத்தில் கல்லூரிக்கு செல்ல வேண்டும், கிராமத்தில் உள்ள மற்ற பெண்களும் செல்ல வேண்டும். கல்வி மிகவும் முக்கியம்," என்று ராக்கி கூறினார்.

சிறிது நேரம் கழித்து பேருந்து வந்தது பெண்கள் இருவரும் கல்லூரிக்கு புறப்பட்டனர். பின்தங்கிவிட்டவர்களுக்கு இன்னும் வருத்தம் இருக்கிறது. *12* ஆம் வகுப்பு வரை மட்டுமே படிக்க முடிந்த கோமல், "நைனாவைப் பார்த்து கல்லூரிக்கு செல்லவேண்டும் என்று மனம் ஆசைப்படுகிறது. ஆனால் அந்த நேரத்தில் என் குடும்பத்தினர் சம்மதிக்கவில்லை" என்கிறார்.

"மாற்றம் ஒரே இரவில் வராது, யாரையும் கட்டாயப்படுத்தியும் வராது. கல்லூரிக்கு செல்லும் பெண்களின் எண்ணிக்கை *15* இல் நின்றுவிடாது என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது," என்று ஜஸ்பிர் கௌர் குறிப்பிட்டார். – நன்றி, பிபிசி தமிழ்

**– துரை சந்துரு**


| Advertisement Tariff | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 10,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 8,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 5,000/- |
| Full Page Black & White | : | ₹ 5,000/- |
| Half Page Black & White | : | ₹ 2,000/- |
| **Annual Subscription** | : | **₹ 240/-** |

Administrative Office:

**PENA KURAL**
**3/885, Pillaiyar Kovil Street, (Opp Bajanai Kovil), Mettukuppam,**
**OMR, Chennai, Tamil Nadu, India - 600097.**
**Ph: 044-35906002, 9962245338**
**Email: penakural@yahoo.com**



# மண் மாசடைதல்

மண் மாசடைதல் (Soil contamination, soil pollution) மனிதனால் உருவாக்கப்பட்ட வேதிப்பொருள்கள் கலப்பதாலும், இயற்கை மண் சூழலில் ஏற்படும் வேறு மாற்றங்களாலும் உருவாகிறது. பொதுவாக இவ்வாறான மாசடைதல், நிலக்கீழ் சேமிப்புத் தொட்டிகள் உடைதல், பூச்சிகொல்லிப் பயன்பாடு, மாசடைந்த மேற்பரப்பு நீர் நிலக்கீழ் மட்டங்களுக்குச் செல்லல், எண்ணெய் மற்றும் எரிபொருட் கழிவுகளைக் கொட்டுதல், தொழிற்சாலைக் கழிவுகளை நேரடியாக நிலத்தில் வெளியேற்றுதல் போன்றவற்றால் ஏற்படுகின்றது. மிகப் பொதுவான வேதிப்பொருள் மாசுகள், பெட்ரோலிய ஐதரோர்பன்கள், கரையங்கள்,

1. பூச்சிகொல்லிகள்
2. ஈயம்
3. பார உலோகங்கள்

இந்த மாசடைதல் தோற்றப்பாடு, தொழில்மயமாதல், வேதிப்பொருட் பயன்பாடு என்பவற்றுடன் ஒத்திசைவாக நடைபெறுகிறது.

மண் மாசடைதலால் ஏற்படக்கூடிய முதலாவது பிரச்சினை உடல்நலத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புத் தொடர்பானது. இது நேரடித் தொடர்பாலோ, மண்ணுடன் நேரடித்தொடர்புடைய நீர் மாசடைதல் மூலமோ ஏற்படலாம். மாசடைந்த மண் பகுதிகளைக் குறித்துவைத்துச் சுத்தப்படுத்துதல் பணச் செலவையும், நேரச் செலவையும் ஏற்படுத்தும் ஒரு வேலையாகும். இதற்கு நிலவியல், நீரியல், வேதியியல், கணினி ஆகிய துறைகள் தொடர்பான திறனும் தேவை.

– K. கலைமணி

# மெய் சிலிர்க்க வைக்கும்
# வீரசாவர்க்கரின் தியாகமும், தீரமும், வீரமும்!

சாவர்க்கரின் வாழ்வினை புரட்டி பார்க்குமுன் இங்கிருக்கும் ஒரு பெரிய பொய்யினை முதலில் உடைக்க வேண்டும் அது சாவர்க்கர் வெள்ளையனுக்கு மன்னிப்புகடிதம் எழுதினார் என்பது.

சாவர்க்கருக்கு விதிக்கபட்டது இரட்டை ஆயுள் 1910ல் கைது செய்யபட்ட அவருக்கு 1960ல்தான் விடுதலையாகும் வாய்ப்பு இருந்தது, அதைவிட கொடுமையாக அவர் சிறையிலே சாகும் நிலையும் இருந்தது. அந்தமான் சிறை அப்படியானது.

அவரை சித்திரவதை செய்யவவே பெர்ரி எனும் ஆங்கிலேயனை அமர்த்தினார்கள். அவன் கொடுமைக்கு பெயர் போனவன். சரியாக தூக்குமேடைக்கு எதிராக ஒரு அறையில் சாவார்க்கரை அடைத்து அவர் கண்முன்பே தூக்கு தண்டனையினை செய்து ரசித்தான் அந்த கொடியவன். செத்தவர்களெல்லாம் தேசாபிமானிகள்.

இன்னும் ஒரு நாளைக்கு 30 லிட்டர் எண்ணெய் எடுக்க செக் இழுக்க வேண்டும். இதர கடும் வேலைகளை செய்யவேண்டும் என்றெல்லாம் கொடுமைபடுத்தபட்டார் சாவர்க்கர்.

நீண்டகால சிறைவாழ்வு அதை முடிக்காமலே அவர் விரைவில் சாக கடும் தண்டனை, என கடும் சித்திரவதைகள்.

டாக்டருக்கு படித்த சாவர்க்கர் கழுத்தில் ஸ்டெதெஸ்கோப் வடிவில் சங்கியிலியிட்டு அவர் காலையும் கழுத்தையும் பிணைத்து என்னவெல்லாமோ கொடுமை செய்ததில்தான் **அவர் ரத்னகிரி சிறைக்கு மாற்றகோரி கடிதம் எழுதினார். அது நிச்சயம் தவறாய் இருக்க முடியாது. சட்டபடி தண்டனை என தனி தீவில் அடைக்கபட்ட அவர் சட்டபடியே உரிமையும் கோரினார்.**

அப்படி என்ன குற்றம் செய்தார் சாவர்க்கர். சரி இதர போராட்ட வீரர்கள் நிலை எப்படி இருந்தது. ஆம், சாவர்க்கரும் வ.உ.சியும், சிவாவும், பாரதியும் சிறையில் வாடினார்கள் படாதபாடு பட்டார்கள்.

ஆனால், காந்திக்கு நவாப்களின் பங்களாவில் வீட்டு சிறை எனும் உல்லாச தண்டனை




கொடுக்கபட்டது, நேரு இருந்த சிறையும் அப்படியே. தண்டனைகொடுக்கபட்டாலும் நேரு சுவிட்சர்லாந்து செல்ல அனுமதி கொடுக்கபட்டு உல்லாச பயணத்துக்கு வழிவகை செய்யபட்டது

நேதாஜி வெள்ளையனை எதிர்த்து காடு காடாய் நாடு நாடாய் ஓட காந்தி, நேரு போன்ற தலைவர்களை ஒப்பிடும்போது ஓரளவு சுகவாழ்வினை வாழ்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் மேல் சிறு கீறல் கூட விழவில்லை.

சாதிகள் இல்லையடி பாப்பா எனப் பாடிய பாரதியினை ஓட ஓட விரட்டிய வெள்ளையன் அம்பேத்கரை சாதி ஒழிப்பு போராளி என தன்னருகே அமர்த்தியதெல்லாம், பாரதியினை ஓடவிட்டு தாகூரை கவிஞன் என்றதெல்லாம் விடைகாணா மர்மங்கள். இங்கு வரலாறு பொய், வெள்ளையன் எழுதிவைத்து அதை காங்கிரஸ், எல்லோரையும் படிக்க வைத்தது பெரும் பொய். அந்த பொய் கனவில் இருந்து வெளிவந்து சாவர்க்கரை படியுங்கள். முழு தெளிவும் கிடைக்கும். அந்த மனிதர் நிச்சயம் நாட்டுபற்றாளர், தேசாபிமானி. இந்த தேசவிடுதலைக்கு ஏதேனும் செய்தாக வேண்டும் என்ற வெறியில் வாழ்வினை அர்பணித்தவர் அந்த சாவர்க்கர். நாசிக் அருகே பிறந்த அவர் மிக சிறிவயதிலே போராடத் தொடங்கியவர். வீரசிவாஜி ஏற்றிவைத்த அந்த பெரும் நெருப்பு அவரிலும் தொடர்ந்து எரிந்தது.

இந்நாடு சுதந்திரம் பெறவேண்டுமென்றால் அப்போது இருந்த 30 கோடி மக்களும் ஒன்றுபட வேண்டும். மொழியால் அவர்களை இணைக்க




முடியாது, ஆட்சி என்றாலும் 600 சமஸ்தானம் இருந்தது. இம்மக்களை இணைக்க மதம் ஒரு வழி என கண்டார் திலகர். அப்படி மதக் கொண்டாட்டத்தில் தேசவிடுதலையினை கலந்து அவர் தொடங்கியதுதான் விநாயக சதுர்த்தி ஊர்வலம், சிவாஜி ஊர்வலம் எல்லாம். இதனை எல்லாம் பார்த்து வளர்ந்த சாவர்கருக்கு அதே கொள்கை வந்தது. வானரசேனை என்றொரு அமைப்பினை தன் 11 வயதிலே தொடங்கினார்.

வெள்ளையரின் மிகப்பெரிய கொடுமைகளெல்லாம் அவர் மனதை வலிக்கச் செய்தது. நல்ல அறிவாளி, படிப்பு அவருக்கு இயல்பாய் வந்தது. எந்த இந்திய தலைவருக்கும் இல்லா ஒரு வித்தியாசமான குணம் அவருக்கு இருந்தது, அது இந்தியாவினை வரலாற்று பாணியில் நோக்குவது.

ஆம், நடந்த வெள்ளையன் ஆட்சிக்கு சலாம் போட்டு பொற்காலம் புரட்சி என அவர் பரணிபாட விரும்பவில்லை, இந்தியாவின் பாரம்பரிய பெருமையினை அதன் வரலாற்றில் இருந்து நோக்கினார். எங்கிருந்தோ இங்கு பிழைக்க வந்தவன் இவ்வளவு சிரமபட்டு இத்தேசத்தை ஆள்கின்றான் என்றால், இது சாதாரண பூமி அல்ல என்பது அவருக்கு விளங்கிற்று. வரலாற்றை அவர் தோண்டி தோண்டி சுதந்திரக்கணலை ஊட்டி அலெக்ஸாண்டரை உலகம் மாவீரன் என சொன்ன காலத்தில் அவன் இந்திய எல்லையில் பெற்ற தோல்வியினை நிறுவிச் சொன்னவர் சாவர்க்கர்.

வீரசிவாஜியின் சிலிர்க்க வைக்கும் வரலாற்றையெல்லாம் வெளிகொண்டுவந்தவர் அவர். இதெல்லாம் ஐரோப்பியரின் கவுரவத்திற்கு வந்த இழுக்காக கருதிய அவர்கள் அன்றே குறி வைத்தனர்.

இன்னும் ஏராள இந்திய வரலாறுகளை வெளிகொணர்ந்தார் சாவர்க்கார்.

1857 சிப்பாய் புரட்சி வெறும் கலவரம் என உலகெல்லாம் பிரிட்டிசார் பூசி மெழுகியபொழுது, அது இந்திய சுதந்திரபோர் என 1907ல் புத்தகம் எழுதி உலகினை திரும்பி பார்க்க வைத்தவர் சாவர்க்கர்.

இதனால் தன் படைவீரர்கள் எல்லாம் படிக்க வேண்டிய புத்தகம் சாவர்கருடையது என உத்தரவே பின்னாளில் போட்டார் நேதாஜி.

லண்டனில் பாரிஸ்டர் படிக்க சென்றாலும் மனிதர் சும்மா இருக்கவில்லை, இந்திய சங்கத்தை உருவாக்கினார். ஆயுதங்களை உருவாக்கி பயிற்சியளித்தார். அதில் பெண்களும் இருந்தனர்.

நிச்சயமாக சொல்லலாம் நேதாஜிக்கு இவ்விஷயத்தில் சாவர்க்கரே முன்னோடி. அவரின் வீரர்கள் இந்தியாவில் ஆளும் கொடூர கலெக்டர்கள் லண்டன் வரும்போது அங்கே தீர்த்துகட்டினர். சிங்கத்தின் குகையில் நுழைந்து அதன் பிடறியினை உலுக்கினார் சாவர்க்கர்.

முதலில் தடுமாறிய ஸ்காட்லான்டு யார்டு பெரும் போராட்டத்திற்கு பின் அவரை கைதுசெய்தது, விசாரணைக்கு கப்பலில் இந்தியா வந்தபொழுது கப்பல் ஓட்டை வழியாக தப்பி சாகசமாக பிரான்ஸை அடைந்தார் சாவர்க்கர்.

பின்னர் பிரான்ஸ், பிரிட்டன் அரசுகள் பேசி வழக்கு நடந்து அவருக்கு 50 ஆண்டு சிறை என முடிவானது. நிச்சயம் அவரை சுட்டுகொல்லும் முடிவில்தான் பிரிட்டன் இருந்தது. ஆனால் பிரான்ஸ் விவகாரம் வந்தபின் அதற்கு பல விவகாரங்கள் வந்ததால் தப்பினார் சாவர்க்கர். **இந்திய சுதந்திர போராட்டத்தில் 1911ல் 50 வருடம் சிறை தண்டனை விதிக்கபட்ட ஒரே தலைவர் அவர்தான்.**

கொடூர அந்தமான் சிறையில் அவரை வைத்தார்கள். செக்கிழுத்தார், மரம் வெட்டினார். இன்னும் 6 மாதம் இருட்டறையில் அடைத்தல், தனிச்சிறை என அவரை உடனே கொல்லமுடியாவிட்டாலும் சித்திரவதை செய்து கொல்ல முடிவு செய்தார்கள். கல்பாணி எனும் படத்தில் வந்த சித்திரவதைகளை அவரும் அனுபவித்தார். அப்பொழுதும் எழுத பேனாவும் பேப்பரும் கேட்டாலும் கிடைக்கவில்லை. இந்த

வலிகள் பின்னாளில் மறுக்கவும்கூடாது. இதை மறக்கவே கூடாது என சுவற்றில் கல்லால் எழுதிவைத்தார் சாவர்க்கர். புகழ்பெற்ற கவிதைகள் அங்குதான் அவரால் எழுதபட்டன.

இதுவரை மிக சரியாக சென்ற அவரின் வரலாறு இதற்கு பின்புதான் மாறுகின்றது. அவர் தான் செய்தது தவறு எனச் சொல்லவில்லை, சுதந்திர போராட்டம் செய்யமாட்டேன் என சொல்லவில்லை. **முன்பு பிரிட்டனில் தப்பித்தது போல் தப்பிக்க மாட்டேன் என்னை ரத்னகிரி சிறைக்கு மாற்றுங்கள் என்றுதான் கோரியிருந்தார், அந்த தப்பித்த முயற்சித்தான் தவறு என குறிப்பிட்டிருந்தார்.**

ஆம், அன்று ஜின்னா தீவிர இஸ்லாமிய தலைவராக செயல்பட்டபொழுது இந்துக் களுக்கான தலைவராக யாருமில்லை, ஜின்னா தனி இஸ்லாமிய நாடு கோரியபொழுது அவரை கண்டிக்க எல்லோருக்கும் தயக்கம் இருந்தது. 1924ல் நன்நடத்தை என விடுதலையும் செய்யபட்டார் சாவர்க்கார். ஏன் விடுதலை செய்யபட்டார் என்றால், அதுதான் வெள்ளையன் தந்திரம். சாவர்க்கர் பற்றி அவனுக்குத் தெரியும். காந்தி பற்றியும் தெரியும். இருவரையும் களத்தில் விட்டால் அவனுக்கு வேலை குறைவு. சாவர்க்கார் வெளிவரும் பொழுது ஜின்னாவின் அட்டகாசம் உச்சத்தில் இருந்தது. பிரிவினை நோக்கி அவர் நடைபோட அவனுக்கு சில நவாப்களின் ஆதரவும் இருந்தது.

சில நவாப்களோ துருக்கிய சாம்ராஜ்ய உதவியுடன் இந்தியாவில், மறுபடி மொகலாய ஆட்சி கொண்டுவந்து வெள்ளையனை விரட்டி, இதை இஸ்லாமிய பூமியாக்க முழு முயற்சி செய்த காரியங்களும் அன்று உண்டு.

காந்தியின் கள்ளமதசார்பின்மை இங்கு இந்துக்களுக்கு ஒரு முடிவும் தராது என உணர்ந்த சாவர்க்கர் 1925ல் இந்து மகாசபை யினை தொடங்கினார். ஆர்.எஸ்.எஸ் முதல் இன்றைய பாஜக வரை அதுதான் தாய் இயக்கம். காந்திக்கும் சாவர்க்கருக்கும் முட்டிக் கொண்டது.

இருவரும் இந்திய சுதந்திரத்திற்கு பாடுபட்டாலும் வழி வேறாய் இருந்தது, காந்திய அஹிம்சை பலருக்கு பிடிக்கவில்லை அதில் சாவர்க்கரும் ஒருவர். காந்தியின் மதசார்பின்மை ஜின்னாவுக்கு ஆதரவானது என்பதுதான் எல்லோரின் எதிர்ப்புக்கும் காரணம், ஆனால் காந்தி திருந்தியபாடில்லை.

தீவிரமாக இந்துத்வா பேச தொடங்கினார் சாவர்க்கர். ஆனால் **தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு போன்ற சீர்திருத்தங்களை செய்யவும் அவர் தயங்கவில்லை. எல்லா சாதி இந்துக்களும் வணங்க "பதித பவன்" எனும் ஆலயத்தையும் ஏற்படுத்தினார்.**

உண்மையில் அன்று சாவர்க்கருக்கு ஆதரவு கூடிற்று. எங்கிருந்தோ வந்தார் ஜின்னா, பாகிஸ்தான் வேண்டுமென்றார். இந்தியா ரத்தத்தில் மிதக்கும் நாள் நெருங்கிற்று.

உண்மையில் இந்தியாவிற்கு சுதந்திரம் தரும் திட்டமெல்லாம் வெள்ளையனுக்கு இல்லை. ஹிட்லர் அடித்த அடியில் பொறிகலங்கி இருந்தது. வேறு வழியே இல்லையா? என சர்ச்சில் போன்றவர்கள் கேட்டபொழுது இனியும் இந்தியாவினை துப்பாக்கி முனையில் ஆள்வது சாத்தியமில்லை என லண்டன் பாரளுமன்றம் சொன்ன பின்பே சுதந்திரம் வந்தது.

ஆனால், தன்னை எதிர்த்தவர்களை எல்லாம் மிக நுட்பமாக பழிவாங்க பாகிஸ்தானை பிரித்துகொடுத்தான் வெள்ளையன். காந்தியின் உண்ணாவிரதம் எல்லாம் ஜின்னாவிடம் எடுபடவில்லை. டம்மி ஆக்கியிருக்க வேண்டிய ஜின்னாவினை காந்தி வெல்லவிட்டது தவறு.

இதன் பின் காங்கிரசுக்கும், சாவர்கருக்கும் பெரும் அபிப்ராய பேதம் வந்தது. சர்ச்சைகள் வெடித்தன. காந்தி கொலைக்கு பின் சாவர்க்கர் தேசவிரோதி ஆக்கபட்டார்.

உண்மையில் காந்தியினை கொல்ல சாவர்க்கருக்கு எந்த அவசியமுமில்லை , கொல்லவேண்டும் என்றால் 1947க்கு முன்பே கொன்றிருக்கலாம். அதன் பின் காந்தி இருந்தாலோ இறந்தாலோ ஆப்போவது ஒன்றுமில்லை எனும்பொழுது ஏன் கொல்லபட வேண்டும்?

காந்தியினை கொன்றது யார் என்பது இதுவரை மர்மமே. கோட்சே சுட்டேன் என ஒப்புதல் வாக்குமூலம் அளித்தாலும் கோட்சே துப்பாக்கி அல்லாத இன்னொரு துப்பாக்கியின் குண்டும் காந்தியின் உடலில் இருந்தது.

இதையெல்லாம் மீறித்தான் சாவர்க்கர் மேல் குற்றம் சுமத்தினார்கள், இந்துமகா சபையினை கொலை அமைப்பு என முடக்கினார்கள்.

மிக வருத்தமான விஷயம் என்னவென்றால், காங்கிரஸ் அவரை இந்நாட்டின் எதிரிபோலவே நடத்திற்று, வெள்ளையன் பறித்த அவரின் வீட்டைக் கூட அது திரும்ப கொடுக்கவில்லை

வெள்ளையன் சாவர்க்கரை ஓட அடித்ததில் நியாயம் இருந்தது. ஆனால், தேசாபிமான காங்கிரஸ் ஏன் செய்ய வேண்டும்?. அங்குதான் காங்கிரஸ் வெள்ளையனின் அடிவருடி கட்சி என்ற சந்தேகம் எல்லோருக்கும் வந்தது. காங்கிரஸ் தன் கோரமுகங்களை அவர்மேல் காட்டிற்று.

எந்த சலுகையும் அவருக்கு இல்லை,

வெள்ளையன் கொடுத்த சில சலுகைகளைக் கூட கொடுக்கமறுத்தது காங்கிரஸ்.

நிச்சயம் இதெல்லாம் மகா தவறான விஷயங்கள். துளியும் சுயநலமின்றி நாட்டிற்காய் உழைத்து, சுதந்திர இந்தியாவில் ஒரு அரசு பதவிக்கும் ஆசைபடாமல், கட்சி நடத்தாமல், அமைதியாய் நாட்டுக்கு ஆலோசனை சொல்லிகொண்டிருந்த அம்மனிதரை அப்படி நோகடித்திருக்க கூடாது.

ஏன் பகைத்தார்கள்?

காஷ்மீர் விஷயத்தில் ஏற்பட போகும் அபாயத்தை அம்மனிதர் முன்பே சொன்னார். பின்னாளில் காங்கிரஸ் அரசு அதில் சிக்கி சீரழிய முன்பே சொன்னேன் அல்லவா? என அவர் சொன்னபொழுது அவர்களுக்கு சகிக்க முடியவில்லை.

ஆச்சரியமாக சீனாவின் நயவஞ்சகம் பற்றியும் எச்சரித்தார் சாவர்க்கர், ஆனால் அவர் மறைந்த பின்பே சீனப்படை எடுப்பு நடந்தது. நாட்டிற்காகப் போராடிய அம்மனிதன் ஒதுக்கபட்டு மூலையில் எறியபட்டதும், பெரும் தியாகம் ஏதும் செய்யாத ராஜேந்திர பிரசாத் குடியரசு தலைவரானதும் நிச்சயம் இந்நாட்டின் கருப்பு பக்கங்கள் என்று கூறலாம்.

அதோடு விட்டார்களா? ஒரு கட்டத்தில் மனம்வெறுத்து அம்மனிதன் சாக தீர்மானித்தார். உண்ணாவிரதம் தொடங்கினார். என்னால் செயல்பட முடியா நிலையில் சமூகத்திற்கு பாரமாய் இரேன் எனச் சொல்லி அவர் சாகும் வரை உண்ணாவிரதம் தொடங்கினார். அரசு தடுக்கவில்லை. அவர் செத்தும் போனார்.

ஆம், பிப்ரவரி 26, 1961 அவர் உடலுக்கு அரசு மரியாதை இல்லை. ஆளும் கட்சியில் ஒரு அமைச்சரோ, எம்.எல்.ஏ கூட வரவில்லை. மாறாக அனாதையாக அந்த சுதந்திர போராளியின் தகனம் நடந்தது. அந்தமானில் அவர் தங்கி இருந்த சிறை அருகே அவருக்கு சிலை, வெகுநாள் கழித்தே வைக்கபட்டது. அதுவும் பத்தோடு பதினொன்றாக வைக்கபட்டு, அவர் இருந்த சிறையும் இன்று இல்லாமல் ஆகிவிட்டது.

அந்த அளவு அவரின் அடையாளத்தை மறைக்க விரும்பியிருக்கின்றார்கள் ஏன்? எனத் தெரியவில்லை? நெடுநாளைக்கு பின்பே அந்தமான் விமான நிலையம் பிரதமர் மோடியால் சாவர்க்கர் நினைவு விமான நிலையமாயிற்று. பாராளுமன்றத்தில் அவர் படமே மிக சர்ச்சைக்கு பின்பே திறக்கபட்டது. அவருக்கு பாரத ரத்னா விருது வழங்கபட வேண்டும் என்ற கோரிக்கைக்கு இன்று மோடி அரசே செவிமடுக்கவில்லை. இவ்வளவிற்கும் இன்று பாஜக ஆட்சிக்கு வர அன்றே அடிகோலியவர் அவர்தான். ஆனாலும் பாஜக அரசு அஞ்சுகின்றது என்றால் எந்த அளவு சாவர்க்கரை பற்றி இங்கு பெரும் கொடும் பிம்பம் உருவாக்கபட்டிருக்கின்றது என்பது ஒன்றும் புரிந்துகொள்ள சிரமம் அல்ல.

இந்நாட்டின் விடுதலைக்காக தன் உயிரை, வாழ்வை எல்லாம் பணயம் வைத்துப் போராடிய ஒருவரை, அந்தமான் சிறையின் கொடூர வடுக்களின் நேரடி சாட்சியாய் வாழ்ந்த ஒருவரை, மதவாதி என ஒதுக்குவதோ ஏதோ, ஹிட்லர் போல பார்ப்பதோ சரியானதல்ல. இந்து மகாசபை என்ற ஒன்றை தொடங்கினாரே அன்றி எங்கும் எதிலும் அடுத்த மதத்தை அவர் வெறுத்தார் என எங்கும் இல்லை. மதத்தின் காரணமாக இந்நாடு பிளக்கபடுவதைத்தான் எதிர்த்தார். வரலாற்றில் ஒரு காட்சி காணகிடக்கின்றது. 1930களில் இந்து முஸ்லீம் பிரச்சினையினை பெரிதாக்கி மின்டோ மார்லி சீர்திருத்தமெல்லாம் செய்து தேர்தலை நடத்தினார். ஜின்னா, அன்று தனி இஸ்லாமிய இயக்கம் கண்டு இஸ்லாமிய அரசியல் செய்தார். ஆனால் சாவர்க்கர் இந்து மகாசபையில் இருந்து இந்து முஸ்லீம் ஒற்றுமை அரசியல் செய்தார். சாதி வேறுபாடின்றி எல்லா மக்களையும் அவர் இந்து மன்றங்களில் ஒன்றிணைத்த காட்சியும் வரலாற்றில் இருக்கின்றது.

நாட்டுபற்றோடு நோக்கினால் அந்த மனிதர் ஒன்றும் மாபெரும் சர்ச்சைகுரியவர் அல்ல. மாறாக எதற்கோ பயந்து அப்படி சித்தரிக்கபட்டு அந்த சித்தரிப்பு கலைந்து போகக்கூடாது என பாதுகாத்தும் வரபட்டிருப்பது புரிகின்றது. சாவர்க்கர் பெயரை தொட்டால் இந்து எழுச்சி ஏற்படும் என் அஞ்சியிருக்கின்றது காங்கிரஸ், ஏன் அஞ்சியது என்றால் வெள்ளையன் கொடுத்த பயிற்சி அப்படி. இந்நாடு எக்காலமும் “மதசார்பற்ற” ஆனால் “சாதி கொண்ட” நாடாக இருந்து குழம்பி தவித்து சண்டையிட்டு கொண்டே இருக்க வேண்டும். அதில் தேசம் வளராமல் நாசமாக வேண்டும் என்பது அவன் எண்ணம். இது இந்துநாடாக, மக்கள் எழுச்சி கொண்ட நாடாக மாறினால் அது பெரும் வளர்ச்சி அடையும் என்பது அவன் பயம். அதைத்தான் காங்கிரசும் செய்தது, சாவர்க்கர் பலிவாங்கபட்டு இல்லா பொய்பிம்பம் சூட்டபட்டது அதனால்தான்.

காலம் அம்மனிதனின் உண்மை முகத்தினை காட்டி கொண்டே இருக்கின்றது, போலி மதசார்பின்மையும், இந்து விரோதமும், காங்கிரசும், கம்யூனிசமும் இன்னும் பல குழப்பமான கொள்கைகளும் இந்தியாவின் கேடுகள் என அன்றே சொன்ன தலைவர் அவர். இன்று அவர் அனாதையாக, பராரியாக செத்த நினைவு நாள். காங்கிரசின் வஞ்சகத்தால் வதைபட்டு செத்ததின் கொடும் நினைவு நாள் (26.02.2022).

இனியாவது இத்தேசம் அந்த சுதந்திர போராட்ட தியாகிக்கு செய்ய வேண்டிய மரியாதையினை செய்யட்டும். அந்த சுதந்திர போராளிக்கு, நவபாரத சிந்தனையாளனுக்கு ஆழ்ந்த அஞ்சலிகள்.

– நா வீ சிவசங்கர்

# ஆஸ்கர் விருது வென்ற ‘தி எலிஃபண்ட் விஸ்பரர்ஸ்’

## ஆவணப்படத்தில் நடித்த பொம்மன், பெள்ளி முதல்வருடன் சந்திப்பு!



தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் காட்டுநாயகன் சமூகத்தைச் சேர்ந்த யானை பாகன் தம்பதியான பொம்மன் – பெல்லியின் உண்மை கதையை வெளிக்கொண்டு வந்த ‘தி எலிஃபன்ட் விஸ்பரர்ஸ்’ என்ற குறு ஆவணப்படம் ஆஸ்கர் விருதை வென்றதை அடுத்து, யானை பாகன் தம்பதியை தமிழ்நாடு அரசு கௌரவித்தது.

இதையொட்டி இந்த தம்பதி முதன் முதலாக நீலகிரி மலையில் இருந்து சென்னை நகருக்கு வந்த அனுபவத்தை பகிர்ந்து நெகிழ்ச்சி அடைந்தனர். சென்னையில் உள்ள அரசு தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்த தம்பதியை அழைத்து இருவருக்கும் பொன்னாடை அணிவித்து வாழ்த்தினார். அத்துடன் ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலையையும் அவர் வழங்கினார்.

முதுமலை யானைகள் காப்பகத்தில் பராமரிப்பாளர்களாகப் பணியாற்றும் பொம்மன், பெல்லி, இதுவரை நீலகிரி மலையை தவிர பிற வெளியூர்களுக்கு அதிகம் சென்றதில்லை என்றும் முதன் முறையாக சென்னை நகர்ப்புறத்துக்கு வந்து முதல்வரை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றது மிகவும் வியப்பைத் தந்தாக கூறுகின்றனர். தங்களது வாழ்க்கை கதையை ஆவணப்படமாக உலக மக்கள் பலரும் பார்த்துள்ளதை அறிந்து மிகவும் மகிழ்ந்ததாக தெரிவித்தனர்.


‘‘நாங்கள் யானை குட்டியை வளர்த்த கதையை உலகம் முழுவதும் பலரும் பார்க்கிறார்கள். எங்களைப் பற்றிய படத்திற்கு ஆஸ்கர் விருது கிடைத்துள்ளது என்பது மிகவும் பெருமையாக உள்ளது. மகிழ்ச்சியைச் சொல்ல வார்த்தைகளே இல்லை. சென்னை நகருக்கு முதல் முறையாக வந்திருக்கிறோம். முதல்வரை நேரில் சந்திப்போம் என்பதை நாங்கள் கனவில் கூட நினைத்ததில்லை,’’ என்று இருவரும் கூறினர்.

தாயைப் பிரிந்த குட்டி யானைகளை இந்தத் தம்பதி எப்படி பராமரித்தனர் என்பதை மையமாகக் கொண்டதுதான் தி எலிஃபன்ட் விஸ்பரரஸ் ஆவணப்படம். அதில் யானைகளுக்கும் இவர்களுக்கும் இடையிலான

உறவை வெளிப்படுத்தும் காட்சிகளை பலரும் வியந்து சமூகவலைத்தளத்தில் பகிர்ந்து வருகின்றனர்.யானை ரகுவை பற்றிப் பேசிய பொம்மன், ''முதலில் எங்களிடம் யானை குட்டி வந்தபோது மோசமாக காயமடைந்த நிலையில் இருந்தது. மருத்துவர்கள், அதிகாரிகள் எங்களிடம் யானையை எப்படி பார்த்துக் கொள்ளவேண்டும் என விளக்கினார்கள். எங்கள் குடும்ப உறுப்பினராகத்தான் ரகுவை பார்த்தோம். நாங்கள் டீ குடித்தால், ரகுவுக்கு ஒரு டப்பாவில் பாலை ஊற்றிக் கொடுப்போம். எங்களில் ஒருவராக யானை குட்டி வளர்ந்ததால், எங்கள் பேரன், பேத்திகள் எங்களை பார்க்க வரும்போது, யானைக் குட்டி அவர்களுடன் விளையாடும்,'' என யானையுடன் இருந்த நினைவுகளை பகிர்ந்தார்.



இந்தி, தமிழ், ஆங்கிலம் உள்ளிட்ட பல மொழிகளில் சேர்ந்த ஒரு கலவையான மொழியில் யானையுடன் பேசியதாகவும், அதற்கு யானை கட்டுப்படும் என்றும் கூறுகிறார் பெல்லி. ''ஆஸ்கர் விருது கிடைக்கும் என்று எங்களுக்கு தெரியாது. நாங்கள் யானையை எப்படி பராமரிக்கிறோம் என்று அவ்வப்போது வந்து படம் எடுப்பார்கள், அதுதான் படமாக வரப்போகிறது, அந்த படத்திற்கு விருது கிடைக்கப்போகிறது என்று அப்போது தெரியாது. இந்த படம் விருது பெற்ற பின்னர், எங்களை போன்ற யானை பராமரிப்பாளர்களின் வாழ்க்கையைப் பற்றி பொதுமக்கள் தெரிந்து கொள்கிறார்கள் என்பது கூடுதல் மகிழ்ச்சி,'' என்கிறார் பெல்லி.





பெல்லியிடம் பாசமாக தலையை சாய்த்து யானை படுத்துக்கொள்ளும் காட்சி வைரலாக சமூகவலைத்தளத்தில் பகிரப்பட்டு வருகிறது. ''யானைக்கு உடல்நிலை சரியில்லை என்றால் எங்களுக்கு மன கஷ்டமாக இருக்கும். இப்போது ரகு யானை கும்கி பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பது எங்களுக்கு கிடைத்த வெற்றி,'' பெல்லி. பொம்மன், பெல்லியை கௌரவித்ததுடன், முதுமலை மற்றும் தெப்பக்காடு யானை காப்பகத்தில் உள்ள 91 பணியாளர்களுக்கும் ரூபாய் ஒரு லட்சம் வழங்கப்படும் என்றும் யானை பராமரிப்பாளர்களுக்கு புதிய வீடு கட்டுவதற்கு ரூ. 9.10 கோடி நிதி ஒதுக்கப்படும் என்றும் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

மேலும், ஆனைமலையில் உள்ள யானைகள் முகாமை மேம்படுத்த ரூபாய் ஐந்து கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அரசு அறிவித்துள்ளது.

– B. **நவின்குமார்**

# சிறுநீரக நோய்களைப் குணப்படுத்தும் ஆசிய கண்டத்திலே அபூர்வ நடராஜர்



அருள்மிகு சுத்த ரத்தினேசுவரர்: இத்திருத்தலத்தில் வீற்றிருக்கும் மூலவர் சுயம்புலிங்கமாக பக்தர்களுக்கு காட்சி தருகின்றார். இந்த மூலவருக்கு சுத்த ரத்தினேஸ்வரர், துய்ய மாமணீஸ்வரர், மாசிலாமணி என்ற மூன்று பெயர்கள் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதம் 12, 13, 14 இந்த 3 தேதிகளில் சூரிய ஒளியானது கர்ப்பகிரகத்தில் இருக்கும் மூலவரின் மேல் படுகிறது. இதே போல் வைகாசி மாதம் விசாக திருவிழாவின் போது, சூரியனின் கதிர்கள் 3 நிமிடங்கள் மூலவரின் மீது படுவது மற்றொரு சிறப்பு.

இந்த கோவிலில் வீற்றிருக்கும் பஞ்ச நதன நடராஜர் சிலை மிகவும் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. பார்ப்பதற்கு கருங்கல்லை போன்று தோற்றம் இருந்தாலும் சில தருணங்களில் அந்தக் கல்லானது கரு நீலமாகவும், கரும் பச்சை வண்ணத்திலும் கூட காட்சிதரும். பல கோடி சூரியனின் சக்தியை உள்ளடக்கிய கல்லாக இது சித்தர்களால் கூறப்பட்டுள்ளது. இந்த பஞ் சநதன பாறையின் மற்றொரு சிறப்பை கேட்டால் எவராலும் நம்ப முடியாது. இந்தப் பாறையில் இறைவனின் திரு உருவத்தை எவராலும் உளியால் செதுக்க முடியாது என்றும், இறைவனின் திருவுருவம் தானாகவே உருவாகும் என்றும், வரலாற்றில் சொல்லப்பட்டிருக்கிறது. எந்த இடத்திலும் காணமுடியாத பஞ்சநதன கல்லில் உருவான சிலைதான் ஊட்டத்தூர் நடராஜர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே நவ லிங்க பூஜை எனப்படும், ஒன்பது விதமான பூஜைகள் அனைத்தும் நிறைவடைந்த பின்னரே, இந்தப் பாறையில் இருக்கும் நடராஜரின் உருவம் தெரியும், என்பதற்காக அபிஷேகம் நிறைவடைந்த பின்புதான் மனிதர்கள் பஞ்சநதன பாறையில் உருவாக்கப்பட்ட நடராஜரை தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். இவ்வளவு சிறப்புமிக்க இத்திருத்தலத்தை ஒரு முறையாவது சென்று தரிசனம் செய்ய வேண்டும் என்று நம் மனதில் தோன்றுகிறது அல்லவா?

இந்த பஞ்சநதன கல்லால் உருவாக்கப்பட்ட நடராஜ பெருமானை உரிய பூஜைகளால் வழிபட்டால் சிறுநீரக கோளாறுகள் நீங்கும் என்பதும் இங்கு வரும் பக்தர்களின் நம்பிக்கையாக இருந்து வருகிறது.

சிறுநீரக கோளாறால் பாதிக்கப்பட்டவர்கள் இத்திருத்தலத்திற்கு வந்து இங்கே கிடைக்கும் வெட்டிவேரை வாங்கி 48 துண்டுகளாக உடைத்து மாலையாக கட்டி நடராஜப் பெருமானுக்கு அணிவிக்க வேண்டும். அடுத்ததாக அவருக்கு உண்டான அர்ச்சனைகளை முறையாக செய்து வழிபட்ட பின்பு, நாம் அணிவித்த அந்த வெட்டிவேர் மாலையை பிரசாதமாகப் பெற்றுக் கொள்ளவேண்டும். கோவிலில் இருக்கும் பிரம்ம தீர்த்த நீரை ஒரு கேனில் சேகரித்து வாங்கிக் கொள்ளலாம். இந்த தீர்த்தம் எத்தனை நாட்கள் ஆனாலும் கெட்டுப்போகாது என்பது குறிப்பிடத்தக்கது. வீட்டுக்கு சென்றதும் தினமும், நடராஜர் சிலையில் இருந்து பெறப்பட்ட வெட்டிவேர் மாலையில் இருந்து ஒரு துண்டை எடுத்து, அந்த தீர்த்தத்தில் போட்டு முதல் நாள் இரவே ஊற வைத்துவிட வேண்டும். மறுநாள் காலையில் அந்த தீர்த்தத்தை எடுத்து குடித்து விடலாம். இப்படி தொடர்ந்து 48 நாட்கள் குடித்து வர சிறுநீர் கோளாறு நீங்கும் என்பது இத்தளத்தின் பக்தர்களின் நம்பிக்கையாக கூறப்படுகிறது. பெண்கள் கட்டாயம் மாதவிலக்கு



நாட்களில் இந்த நீரை பருக கூடாது. 48 நாட்கள் முடிந்ததும் மீதமுள்ள வெட்டிவேரை ஓடும் ஆற்றில் விட்டு விடலாம். பல பேர் இந்த பரிகாரத்தை செய்து சிறுநீர் கோளாறுகள் முழுமையாக நீங்கிய பின்பு திரும்பவும் இந்த ஆலயத்திற்கு வந்து சிவபெருமானை வழிபட்டு அபிஷேக அர்ச்சனை ஆராதனை செய்து நன்றி தெரிவித்து விட்டு சென்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**தல வரலாறு:** பழங்கால வரலாற்று சிறப்பு மிக்க ஊட்டத்தூர் சுத்தரத்தினேஸ்வரர் திருக்கோவில் ராஜராஜ சோழ மன்னரால் கட்டப்பட்டது. முற்காலத்தில் ஊற்றத்தூர் என கல்வெட்டில் குறிக்கப்பட்ட இவ்வூர் தற்போது ஊட்டத்தூர் என்று அழைக்கப்படுகிறது. ஊட்டத்தூரின் மேற்கு திசையில் அமைந்திருக்கும் சோளேஸ்வரம் கோவிலுக்கு ராஜராஜ சோழன் அடிக்கடி வருகை தருவார். ஒருசமயம் மன்னரின் வருகைக்காக, பாதையை சரி செய்யும் சமயத்தில் மண்வெட்டியால் புல்லை வெட்டும் போது, ஒரு இடத்தில் இருந்து ரத்தம் பீரிட்டது. பயந்துபோன தொழிலாளிகள் இந்த செய்தியை மன்னனிடம் தெரிவித்தனர். அந்த இடத்தில் இருந்த சிவலிங்கத்தை கண்டுபிடித்து, செய்த பாவத்திற்காக மன்னிப்பும் கேட்டு, அந்த லிங்கத்திற்கு ஊட்டத்தூரில் ரத்தினேசுவரர் திருக்கோவிலை கட்டினார் ராஜராஜ சோழ மன்னர். இன்றும் இத்திருத்தலத்தில் வீட்டிலிருக்கும் லிங்கத்தின் நெற்றியில் வடு தென்படுவது குறிப்பிடத்தக்கது.

**இழந்த பதவி தரும் ஊட்டத்தூர் சிவன்**

ஆசிய கண்டத்திலேயே அபூர்வ நடராஜர் திருக்கோவில் இது. சிறுநீரகம் சம்மந்தமான கோளாறுகளை நீக்கக்கூடியவர். இந்திரன் பதவி இழந்தவுடன் இந்த நடராஜ பெருமானை தரிசித்து மீண்டும் இந்திர பதவியை பெற்றார். பதவியை இழந்தவர்கள் இந்த கோவிலுக்கு வந்து வழிபாடு செய்தால் மீண்டும் இழந்த பதவியை பெறலாம் என்பதை கல்வெட்டு செய்திகள் தெரிவிக்கிறது.

**பலன்கள்:** நம் உடலில் இருக்கும் எப்படிப்பட்ட நோயாக இருந்தாலும், அதை தீர்க்கும் சக்தி, இத்தலத்தில் வீற்றிருக்கும் பஞ்சநதன நடராஜர்க்கு உண்டு. திருமணத் தடை உள்ளவர்கள் இத்தலத்தில் பிரார்த்தனை செய்துகொள்ளலாம். இழந்த பதவியையும் மீட்பதற்கு சிவபெருமானை வழிபடலாம்.

**பலன் தரும் நவகிரகங்கள்**



கோவில் கொடி மரம் அருகே மேற்கூரையில் 12 ராசிகள், 27 நட்சத்திரங்கள் செதுக்கப்பட்டு அவை பூமியை நோக்கி பார்க்கும்படி உள்ளது இங்குள்ள மற்றொரு சிறப்பம்சம். அதன் அருகிலேயே 9 கிரகங்களும் வடிவமைக்கப்பட்டு உள்ளன. சிவன் கோவில்களில் நவக்கிரகங்கள் மற்றும் ராசிகளின் அதிபதிகள் தனித்தனி சன்னதியாக தான் இருக்கும். ஆனால் ஊட்டத்தூர் கோவிலில் இவை அனைத்தும் பூமியை நோக்கி இருப்பதால் அதன் அடியில் வைத்து செய்யப்படும் யாக பூஜைகள் அனைத்திற்கும் உடனடி பலன் கிடைக்கும். எந்த ராசியை சேர்ந்தவர்களும் இதன் மூலம் முழு பயன் அடைய முடியும்.

**பிரம்மா சாபம் பெற்ற தலம்**

பிரம்மாவுக்கு இந்த ஊரில்தான் சாப விமோசனம் கிடைத்தது. ஆதலால் சிவன் எதிரில் பிரம்ம தீர்த்தம் உள்ளது. உலகின் உள்ள அனைத்து




தீர்த்தங்களையும் பிரம்மா ஊட்டத்தூருக்கு கொண்டு வந்து பிரம்ம தீர்த்தத்தில் சேர்த்து உள்ளார். இதனால் இந்த பிரம்ம தீர்த்த நீரை எடுத்துச்சென்று நோயுற்றவர்களின் உடலில் தெளித்தால் அவர்கள் குணமடைவதாக கர்ண பரம்பரை கதைகள் கூறுகின்றன. இதற்கு சான்றாக ராஜராஜசோழன் உடல்நலம் இல்லாமல் இருந்தபோது ஊட்டத்தூர் வந்து பிரம்ம தீர்த்தத்தை உடலில் தெளித்து இறைவனை வழிபட்டு அடைந்து தனது ஆயுட்காலம் வரை நோய் நொடியின்றி வாழ்ந்தார் என்கிறது கதை. வேறு எந்த கோவிலிலும் சிவன் எதிரில் தீர்த்தம் கிடையாது.

**கால பைரவரின் சக்தி**

இந்த கோவிலில் உள்ள காலபைரவர் சக்திவாய்ந்த தெய்வமாவார். கால பைரவருக்கு 11 வாரங்கள் தொடர்ந்து சகஸ்ரநாம வழிபாடு செய்தால் சிறு குழந்தைகளின் மன பயம் நீங்குவதாகவும், மாடுகளுக்கு வியாதிகள் தீர்வதாகவும் ஐதீகம். அஷ்டமி திதியன்று கால பைரவருக்கு யாகம் நடத்தி, அபிஷேகங்கள், சந்தன காப்பு அலங்காரம் செய்து காலாஷ்ட மந்திரம் ஓதி வழிபாடு செய்தால் மரண பயம் நீங்குவதாகவும் கூறப்படுகிறது. இதனால் தீராத நோயினால் அவதிப்படுபவர்கள் இந்த சன்னதியில் சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்டு வருகிறார்கள்.

**செல்லும் வழி:**

சென்னையிலிருந்து திருச்சி நெடுஞ்சாலையில், திருச்சிக்கு முன்னதாக பாடலூர் என்ற இடத்தில் இருந்து சுமார் 4 கி.மீ தூரத்தில் இத்திருத்தலம் அமைந்துள்ளது.

**தரிசன நேரம்:**

காலை 07.00 – 12.00 மாலை 04.00 – 08.00

**முகவரி:**


அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத
சுத்தரத்தினேஸ்வரர் திருக்கோயில்,
லால்குடி தாலுகா, பாடலூர் வழி,
ஊட்டத்தூர், திருச்சி 621109.

– **தமிழினி**

# கெட்ட கொழுப்பைக் கரைக்கும் முள்ளங்கியை அடிக்கடி சாப்பிடுங்கள்



1. சிறுநீரகத்தொற்றைச் சரிசெய்யும்.
2. உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும்.
3. உடலில் உள்ள கழிவுகளை நீக்கும்.
4. மூல நோய் இருப்பவர்கள் அவசியம் சாப்பிட வேண்டும்.
5. புற்றுநோய் செல்களை வளரவிடாமல் தடுக்கும்.
6. கெட்ட கொழுப்பைக் கரைக்கும்.
7. நீர்ச்சத்துக்களை உடலில் சேர்க்கும்.
8. மூட்டு வலி, வீக்கத்தைக் குறைக்கும். பற்களுக்கு நல்லது.
9. இரத்தத்தில் உள்ள பிலுருபினை சீர்செய்வதால், மஞ்சள்காமாலையைக் குணமாக்க உதவும்.
10. மலக்குடலில் உள்ள கழிவை வெளியேற்றி, குடலைச் சுத்தம்செய்யும்.
11. ஆஸ்துமா, சுவாசப் பிரச்னைகள், தொண்டை எரிச்சல், தொற்று, அலர்ஜி சரியாகும்.
12. சிகரெட்டால் பாதித்த நுரையீரலைச் சரிசெய்ய உதவும்.
13. உடல் எடையைக் குறைக்க உதவும்.
14. வைட்டமின் சி, எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.




## STATEMENT OF OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT PENA KURAL, TAMIL MONTHLY

### FORM IV ( See Rule 8)

| | |
|---|---|
| 1. Place of publication | : 7/13, 2nd Floor, Ponmanachemmal Street, M.G.R Nagar, K.K.Nagar, Chennai - 600 078. |
| 2. Periodicity | : **Monthly** |
| 3. Printer Name | : **NV SIVASHANKAR** |
| (a) Whether Citizen of India | : **Yes** |
| (b) Nationality | : **Indian** |
| (c) Address | : **J.M. PROCESS** No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002. |
| 4. Publisher Name | : **NV SIVASHANKAR** |
| (a) Whether Citizen of India | : **Yes** |
| (b) Nationality | : **Indian** |
| (c) Address | : 7/13, 2nd Floor, Ponmanachemmal Street, M.G.R Nagar, K.K.Nagar, Chennai - 600 078. |
| 5. Editor Name | : **RATHIKA S** |

**I, NV SIVASHANKAR, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.**

**Dated: 10.03.2023**

**NV SIVASHANKAR**
**Publisher**

# 3 வல்லரசுகள், அணுசக்தி நீர்மூழ்கி படை உருவாக்க திட்டம்! இதை சீனா எதிர்ப்பது ஏன்?

இந்திய - பசிஃபிக் பிராந்தியத்தில் சீன செல்வாக்கை எதிர்கொள்ள அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் படையை உருவாக்க அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் திட்டமிட்டுள்ளன. அது குறித்த விவரங்களையும் அந்நாடுகள் வெளியிட்டுள்ளன. ஆக்கஸ் என அழைக்கப்படும் இந்த மூன்று நாடுகளின் ஒப்பந்தப்படி, ஆஸ்திரேலியா முதல் முறையாக அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலை பெறுகிறது. குறைந்தபட்சம் 3 அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை அமெரிக்கா வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிரிட்டன் உருவாக்கிய ரோல்ஸ்-ராய்ஸ் அணுஉலைகளை உள்ளடக்கிய அதிநவீன அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் படையை உருவாக்க இந்த கூட்டணி திட்டமிட்டுள்ளது.

3 நாடுகளின் இந்த கடற்படை ஒப்பந்தத்தை சீனா கடுமையாக எதிர்த்துள்ளது. "3 நாடுகளும் மேலும் மேலும் தவறான, ஆபத்தான பாதையில் அடியெடுத்து வைக்கின்றன" என்று சீன வெளியுறவுத்துறை குற்றம்சாட்டியுள்ளது. அணுஆயுத பரவல் தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கு நாடுகள் பின்னுக்குத் தள்ளியிருப்பதாக ஐ.நா.வுக்கான சீன தூதர் குற்றம்சாட்டியுள்ளார்.

ஆனால் அந்த பிராந்தியத்தில் அமைதியை பராமரிக்கும் நோக்கிலேயே இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதாகக் கூறியுள்ள அமெரிக்க அதிபர் ஜோ பைடன், அந்த நீர்மூழ்கிக் கப்பல்கள் அணுசக்தியால் இயங்குபவையே தவிர, அணுஆயுதங்களைக் கொண்டவை அல்ல என்று தெளிவுபடுத்தியுள்ளார். கலிஃபோர்னியாவின் சான்டியாகோ நகரில் பிரிட்டன், ஆஸ்திரேலிய பிரதமர்களுடன் ஒன்றாக செய்தியாளர்களைச் சந்தித்த பைடன், அணுசக்தி அல்லாத நாடாக நீடித்திருக்க வேண்டும் என்ற ஆஸ்திரேலியாவின் உறுதிப்பாட்டை இந்த ஒப்பந்தம் சீர்குலைக்காது என்றார்.

ஆஸ்திரேலியாவைப் பொருத்தவரை, அதன் ராணுவ வலிமையை வலுப்படுத்தும் மிகப்பெரிய நடவடிக்கை இதுவாகும். பிரிட்டனுக்குப் பிறகு, அமெரிக்காவின் அதிநவீன அணுசக்தி தொழில்நுட்பத்தைப் பெறும் இரண்டாவது நாடு ஆஸ்திரேலியாதான். ஆஸ்திரேலியாவிடம் தற்போதுள்ள டீசல் எஞ்சின் நீர்மூழ்கிக் கப்பல்களைக் காட்டிலும் அதிக தொலைவிலும், அதிவேகத்திலும் அந்நாட்டின் கப்பல் படை செயல்பட முடியும். இதன் மூலம் எதிரிகளின் நீண்ட தூர இலக்குகளையும் தாக்கும் வல்லமையை ஆஸ்திரேலியா முதன் முதலாகப் பெற்றிருக்கிறது.

இந்த ஒப்பந்தப்படி, ஆஸ்திரேலிய கப்பல் படை மாலுமிகள் அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் நீர்மூழ்கிக் கப்பல் தளங்களுக்கு இந்த ஆண்டு முதல் அனுப்பி வைக்கப்படுவார்கள். அங்கே, அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை எவ்வாறு பயன்படுத்துவது என்ற பயிற்சியை அவர்கள் பெறுவார்கள்.

மேற்கு ஆஸ்திரேலியாவின் பெர்த் நகரில் அமெரிக்காவும், பிரிட்டனும் 2027-ம் ஆண்டு முதல் சிறிய அளவில் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் படைத் தளத்தை பராமரிக்கும். 2030களின் தொடக்கத்தில் அமெரிக்காவிடம் இருந்து 3 விர்ஜினியா வகை நீர்மூழ்கிக் கப்பல்களை ஆஸ்திரேலியா வாங்கும். தேவை மற்றும் விருப்பத்தைப் பொருத்து, அதே வகை நீர்மூழ்கிக் கப்பல்களில் மேலும் இரண்டை ஆஸ்திரேலியா வாங்கிக் கொள்ளவும் இந்த ஒப்பந்தம் வழிவகுத்துள்ளது.

அதன் பிறகு, பிரிட்டன் மற்றும் ஆஸ்திரேலிய கடற்படைகளுக்காக முழுக்கமுழுக்க புதிய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலை வடிவமைத்து, நிர்மாணிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அந்த புதிய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்கள் எஸ்.எஸ்.என்.-ஆக்கஸ் என்று அழைக்கப்படும்.

இந்த தாக்குதல் வகை அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்கள் பிரிட்டிஷ் வடிவமைப்பின் அடிப்படையின் பிரிட்டன் மற்றும் ஆஸ்திரேலியாவில் கட்டப்படும். 3 நாடுகளின் சிறந்த தொழில்நுட்பங்களும் அதில் பயன்படுத்தப்படும்.






இந்திய, பசிஃபிக் பிராந்தியம் சுதந்திரமான, திறந்த வெளியாக இருப்பதை உறுதி செய்ய 3 நாடுகளும் உறுதிபூண்டிருப்பதாக பைடன் தெரிவித்தார்.

"இந்த புதிய கூட்டணி மூலம், ஜனநாயக சக்திகள் சுய பாதுகாப்பையும், வளத்தையும் எவ்வாறு உறுதிப்படுத்த முடியும் என்பதை நாங்கள் வெளிக்காட்டியுள்ளோம். இது நமக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த உலகிற்குமானது" என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் நீர்மூழ்கி கப்பல் கட்டும் திறனை அதிகரிக்கவும், தற்போதுள்ள அணுசக்தியால் இயங்கும் விர்ஜினியா வகை நீர்மூழ்கி கப்பல்களின் பராமரிப்பை மேம்படுத்தவும் 4.6 பில்லியன் அமெரிக்க டாலர்களை ஒதுக்கவும் அவர் உறுதியளித்துள்ளார்.

ஆஸ்திரேலிய பிரதமர் ஆன்டனி அல்பேனிஸ் பேசுகையில், "இந்த திட்டத்தால் ஆஸ்திரேலியாவுக்கு அடுத்த 30 ஆண்டுகளில் 368 பில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவு பிடிக்கும். ஆஸ்திரேலிய வரலாற்றில் அதன் பாதுகாப்புத் திறனை அதிகரிக்க ஒரே நேரத்தில் செய்யப்படும் மிகப்பெரிய முதலீடு இது" என்று கூறினார்.

ஆஸ்திரேலிய கப்பல் கட்டும் தளங்களில் நீர்மூழ்கிகளை கட்டுவது உள்நாட்டில் ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்றும் அவர் கூறினார்.

இதேபோல், பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சூனக்கும், இந்த நீர்மூழ்கிகளை கட்டும் பணிகள் நடக்கவுள்ள டெர்பி மற்றும் பரோ-இன்-ஃபர்னஸ் ஆகிய இடங்களில் ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றார். ஆக்கஸ் கூட்டணி உருவாக்கப்பட்ட பிறகு கடந்த 18 மாதங்களில் உலகின் நிலைத்தன்மைக்கான சவால்கள் அதிகரித்திருப்பதாக ரிஷி சூனக் கூறினார்.

"யுக்ரேன் மீதான ரஷ்யாவின் சட்டவிரோத படையெடுப்பு, அதிகரித்து வரும் சீனாவின் சீற்றம், இரான் மற்றும் வட கொரியாவின் மோசமான நடத்தை ஆகிய அனைத்துமே ஆபத்து, சீர்குலைவு, பிளவுபட்ட உலகை உருவாக்க அச்சுறுத்துகின்றன" என்கிறார் அவர். அமெரிக்க பயணத்தின் ஒரு பகுதியாக, எதிரி நாடுகளின் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் பொருட்டு பிரிட்டனின் பாதுகாப்பு செலவை அடுத்த 2 ஆண்டுகளில் 6 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு அதிகரிக்க ரிஷி சுனக் உறுதியளித்துள்ளார்.

2021-ம் ஆண்டு அறிவிக்கப்பட்ட ஆக்கஸ் ராணுவக் கூட்டணி குறித்து சீனா தொடர்ந்து விமர்சித்து வருகிறது. இந்த ஒப்பந்தம் ஆயுதப் போட்டியை உருவாக்கும் ஆபத்து கொண்டது என்று சீன வெளியுறவுத்துறை கடந்த வாரமும் தனது நிலைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியது.


ஆனால், இந்திய, பசிஃபிக் பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்தும் நோக்கிலேயே இந்த பாதுகாப்பு ஒப்பந்தம் செய்யப்பட்டதாக அந்த 3 மேற்கத்திய நாடுகளும் கூறுகின்றன.

மூன்று தலைவர்களுமே, இந்த ஒப்பந்தம் தங்களுக்கு இடையே உள்ள ஒத்துழைப்பை வலுப்படுத்தும் என்று வலியுறுத்திச் சொன்னாலும் கூட, இதற்கு அரசியல் எதிரொலி இல்லாமல் இல்லை.

இதற்காகவே, பிரான்சுடன் செய்து கொண்டிருந்த பல கோடி ரூபாய் மதிப்புள்ள டீசல் நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்கும் ஒப்பந்தத்தை ஆஸ்திரேலியா ரத்து செய்தது. இது பிரான்சுடன் அரசியல் கருத்துவேறுபாடு உருவாகக் காரணமானது.

அத்துடன், ஆஸ்திரேலியா தனது மிகப்பெரிய வர்த்தக கூட்டாளியான சீனாவுடன் கொண்டுள்ள உறவில் தர்மசங்கடத்தை எதிர்கொண்டுள்ளது. சீனாவுடன் வலுவான வர்த்தக உறவுகளை வைத்துக் கொள்ளும் அதேநேரத்தில், அமெரிக்காவுடனான ராணுவ உறவையும் தொடர்ந்து வலுப்படுத்த முடியுமா என்பதே ஆஸ்திரேலியா முன்புள்ள கேள்வி என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

– N. **மதிவாணன்**




# சினிமா விமர்சனம்

சென்னை துறைமுகத்தில் கிரேன் ஆபரேட்டராக பணியாற்றும் அகிலன் (ஜெயம் ரவி), தடைசெய்யப்பட்ட பொருள்களைக் கப்பல் மூலம் கடத்தும் பரந்தாமனுக்கு (ஹரீஷ் பெரடி) அடியாளாகவும் இருக்கிறார். கடத்தல் கும்பலின் சர்வதேச தாதா கபூரை (தருண் அரோரா)எப்படியாவது சந்திக்க வேண்டும் என்பது அகிலனின் ஆசை. இந்தியப் பெருங்கடலின் தனி ராஜாவாகும் கனவில் இருக்கும் அகிலனின் ஆசை நிறைவேறியதா? அந்த ஆசைக்குப் பின்னிருக்கும் லட்சியம் என்ன? என்பதை, அதிகம் அறிந்திராத துறைமுகப் பின்னணியில் சொல்கிறது 'அகிலன்'.

மூன்று பக்கமும் நீரால் சூழப்பட்ட நிலத்தில், கடல் வழி போக்குவரத்தின் சட்டவிரோத வணிகம், அதன் கரடு முரடான துரோகச் செயல்பாடுகள், அதன் பின் இருக்கும் 'இந்திய பெருங்கடலின் ராஜா'என்கிற அதிகாரத்தைக் கைப்பற்ற நினைக்கும் இரக்கமற்ற இளைஞன், அவனுக்குள் இருக்கும் உலகப் பசி போக்கும் அசத்தலான 'தமிழன்னை' கனவு என தீவிரமானக் கதையை, இதுவரைச் சொல்லப்படாதப் பின்னணியில் கையில் எடுத்திருக்கிறார் இயக்குநர் என்.கல்யாண் கிருஷ்ணன். ஆனால், இவை அனைத்தையும் கோர்த்த விஷயத்தில்தான் தடுமாறி இருக்கிறார்.

உலகின் பசி தீர்க்கும் லட்சியத்தை கடத்தல் மாஃபியா பின்னணியில் சொல்ல வந்த கதை, அதை அழுத்தமாகச் சொல்லாமல் மற்ற 'டீட்டெய்லிங்'கில் கவனம் செலுத்தி இருப்பதால் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாமல் சாதாரணமாகக் கடக்கிறது. ஆனால், அந்தக் குறையை, சர்வதேச இணையக் குற்றவாளியை கன்டெயினரில் மறைத்துக் கடத்துவது போன்ற சில சில்லிட வைக்கும் காட்சிகள் போக்குகின்றன.



தனது கேரக்டருக்கான தோற்றத்தையும் உடல் மொழியையும் சிறப்பாகக் கொண்டு வந்திருக்கிறார் ஜெயம் ரவி.அதற்கான மெனக்கெடலும் உழைப்பும்தெரிகிறது. அவர் காதலியாக வரும் பிரியா பவானி சங்கரின் 'கதாநாயகி' பாவனை, உதவி ஆய்வாளர் கேரக்டருக்குப் பொருந்தவில்லை.

அகிலனை கைது செய்யத் துடிக்கும் நேர்மையான காவல் அதிகாரிசிராக் ஜானி, சில காட்சிகள் மட்டுமேவந்துபோகும் வில்லன் தருண் அரோரா,துறைமுகக் கடத்தல் தலைவன் ஹரீஷ் பெரடி, தொழிற்சங்கத் தலைவர் ஜனநாதனாக மதுசூதன் ராவ், ஹரீஷ் உத்தமன், சில காட்சிகள் மட்டுமே தலைக்காட்டிப் போகும் தான்யாராஜேந்திரன் ஆகியோர் தங்கள்பாத்திரம் உணர்ந்து நடித்திருக்கிறார்கள்.

விவேக் ஆனந்தின் ஒளிப்பதிவில், துறைமுக நடைமுறைகளும் நீலக்கடலின் நீள அகலமும் வியக்க வைக்கின்றன. பின்னணி இசையில் சாம் சி.எஸ் தனித்துத் தெரிகிறார்.

படத்தில் ஏகப்பட்ட லாஜிக் மீறல்கள். அதைச் சரி செய்து, பசி போக்கும் 'சாரிட்டி ஷிப்' விஷயத்தை அழுத்தமாகச் சொல்லியிருந்தால் படம் இன்னும் ஈர்த்திருக்கும். இருந்தாலும் பிரம்மாண்ட காட்சி அனுபவத்துக்காக அகிலனை ரசிக்கலாம்.

– P. **கார்த்திகேயன்**

# தொழில் நுட்பத்தை சரியாக பயன்படுத்துங்கள்!

## இளம் தலைமுறையினருக்கு முதல்வர் அறிவுரை!




சென்னை வர்த்தக மையத்தில், தமிழக தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனத்தின், 'பிரிட்ஜ்' என்ற 50வது மாநாடு நடந்தது. மாநாட்டை துவக்கி வைத்து, முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

மனிதரின் அன்றாட தேவைகளில் ஒன்றாக, தொழில்நுட்ப பொருட்கள் மாறியுள்ளன. தனி மனித பாதுகாப்பையும், சமூக பாதுகாப்பையும் உறுதி செய்ய, தொழில்நுட்ப வளர்ச்சி இன்றியமையாத ஒன்றாக உள்ளது.

**பேருதவி**

இயற்கை சீற்றங்களை முன்கூட்டியே அறிந்து, நம்மை பாதுகாத்துக் கொள்ளவும், தொழில்நுட்பம் பேருதவியாக உள்ளது.


தொழில்நுட்பங்களை ஏமாற்றுவதற்கு பயன்படுத்தும் குற்றச் சம்பவங்கள் அதிகம் நடக்கின்றன. வதந்திகளை பரப்பி, சட்டம் ஒழுங்கை கெடுக்கவும், சில அரசியல் சக்திகள் பயன்படுத்துகின்றன.

ஆபாச வலைதளங்கள் பெருகி வருகின்றன. 'ஆன்லைன் ரம்மி' விளையாட்டு, மனித உயிர்களை நித்தமும் பலி வாங்கி வருகிறது.

**நாட்டின் வளர்ச்சி**

எனவே, வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பத்தை, இளைய தலைமுறையினர் சரியாக பயன்படுத்தி, வாழ்வின் முன்னேற்றம் காண வேண்டும்; நாட்டின் வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும்; அதற்கு அடிமையாகிவிடக்கூடாது. இவ்வாறு, முதல்வர் பேசினார்.

– B. **மணிகண்டன்**



**செய்முறை:** இரண்டு மூன்று கட்டு முருங்கை கீரை இலைகளை நன்றாக கழுவி எடுத்து, மிக்ஸியில் அரைத்து இரண்டு லிட்டர் வரும்படி சாறாக்கி கொள்ளவும்.

இந்த இரண்டு லிட்டர் முருங்கை சாற்றில் ஒரு கிலோ பச்சரிசி, ஐம்பது கிராம் மிளகு, இருநூறு கிராம் பாசிபருப்பு, சிறிது, சுக்கு மற்றும் ஏலக்காய் சேர்த்து, வெயிலில் காய வைக்கவேண்டும்.

முருங்கை சாறில் அரிசி மற்றும் இதர பொருட்கள் நன்றாக ஊற வேண்டும். இவை அனைத்தும் நன்றாக ஊறியபின்பு மறுபடியும் ஈரப்பதம் போகும் வரை வெயிலில் காய வைத்து, சிறு குருணையாக பொடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இதனை ஒரு டப்பாவில் பத்திரப்படுத்தி, தினந்தோறும் தண்ணீரை கொதிக்க வைத்து அதில் முருங்கை அரிசி குருணையை கஞ்சியாக செய்து சிறிது கல் உப்பு சேர்த்து குடிக்கவும்.

இந்தக் கஞ்சியை காலை இரவு என்று இரண்டு வேளையும் சாப்பிடலாம். அல்லது காலையில் மட்டும் குடிக்கலாம். இந்த கஞ்சி




முதுகெலும்பை வலுப்படுத்துகிறது.

L4, L5 இன்று நிறைய நபர்களுக்குத் தேய்ந்து போய் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பெண் களுக்கு அறுவை சிகிச்சை செய்து குழந்தை பிறந்தது என்றால் L4, L5 தேய்ந்து போகிறது.

இருசக்கர வாகனங்கள் அதிகம் பயன்படுத்து வோர்க்கு லி4, லி5 தேய்ந்து போகிறது. அந்த L4, L5 தேய்ந்து போய்விட்டது என்றால், உட்கார முடியாத நிலை, முதுகு வலி, இடுப்புவலி உண்டாகும்.

அந்தமாதிரி L4, L5 தேய்ந்து போவது, L4, L5 என்று சொல்லக்கூடிய முதுகெலும்பில் இருக்கக்கூடிய, " disc prolapse " ஆவது. இவை அனைத்துக்குமே முழுமையான மருந்து இந்த முருங்கைக்கீரை கஞ்சிதான்.

அதிக இரும்பு சத்து மற்றும் கால்சியம் சத்துகொண்டுள்ள இந்த முருங்கைக்கீரைக் கஞ்சியை 48 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டே வரவேண்டும். இவ்வாறு சாப்பிட்டு வந்தால், உங்களுடைய முதுகு எலும்பு வலுவாகும். இடுப்பு வலி, முதுகு வலி குணமாகி விடும். அனைவருக்கும் பகிருங்கள்...!! பயன் பெறுங்கள்....!!

– V. **சந்தோஷ் குமார்**



# முதுகுஎலும்பு தேய்மானத்தை கட்டுக்குள் வைக்கும் அற்புத முருங்கை கஞ்சி வைத்தியம்!

# இராமேசுவரம் ராமநாதசுவாமி திருக்கோயிலில் பழமையான ஓலைச்சுவடி கட்டுகள் கண்டுபிடிப்பு



தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் உள்ள திருக்கோயில்களில் உள்ள ஓலைச்சுவடிகளைத் திரட்டிப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் நூலாக்கம் செய்யவும் திருக்கோயில் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு, பராமரிப்பு, நூலாக்கத் திட்டப் பணிக்குழு ஒன்றை அமைத்துள்ளது. இச்சுவடித் திட்டப் பணி குழுவினர் கடந்த 06.03.2023 அன்று ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோயிலுக்குக் கள ஆய்வுக்குச் சென்றனர். சுவடித் திரட்டுநர் பணிக்குழு திருக்கோயில் சுவடித்திட்டப் பணியின் ஒருங்கிணைப்பாளரும் சுவடியியல் அறிஞருமான முனைவர் சு.தாமரைப்பாண்டியன் அவர்களின் ஆலோசனைப்படி கோயில் அறைகள் தோறும் பல மணி நேரம் சுவடிகள் உள்ளதா? என்று தேடினர்.

பின்பு பழைய கோப்புகள் வைக்கப்பட்டிருந்த ஒரு பழைய அறைக்குள் பல ஆண்டுகள் பராமரிப்பு எதுவும் செய்யப்படாமல் பூச்சிகளும் பூஞ்சைகளும் தூசுகளும் படிந்த நிலையில் சுமார் 300 க்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகட்டுகள் இருப்பதைக் கண்டுபிடித்தனர். அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட ஓலைச்சுவடிக்கட்டுகளைச் சுவடித் திட்டப் பணிக்குழுவில் உள்ள சுவடி ஆய்வாளர்களும் சுவடிப் பராமரிப்புக்குழுவினரும் நேரடியாகச் சென்று 9 நாட்கள் அங்குத் தங்கியிருந்து முதலில் ஓலைச் சுவடிகளை முறையாகச் சுத்தம் செய்தனர். பின்பு புதிய நூல் கொண்டு ஓலைச்சுவடிகளை முறையாகக் கட்டி வைத்தனர். ஓலைச்சுவடிக்கட்டுகள் மொத்தம் 308 இருந்தமையினைக் கண்டுபிடித்தனர்.

அதோடு ஓலைச்சுவடிகள் தமிழ், கிரந்தம், தெலுங்கு, தேவநாகரி மொழியில் எழுதப்பட்டிருப்பதையும் அடையாளம் கண்டு உறுதி செய்தனர்.

ஓலைச்சுவடிக்கட்டுகளில் 25,543 ஏடுகள் இருப்பதையும் எண்ணிக்கை செய்து உறுதி செய்தனர். மேலும் திருக்கோயில் சுவடிப் பணியாளர்கள் சுவடியில் உள்ள நூல்களின் பெயரையும் உரிய மொழி சார் வல்லுநர் மூலம் கண்டறியும் பணியினையும் செய்து வருகின்றனர். அதோடு விரைவில் சுவடிகள் பராமரிப்பு பணியும் நூலாக்கப் பணியும் தொடங்க, முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

– R.ஹரிகிருஷ்ணன்

# யானைகளை காவு வாங்கும் மின்சார வேலிகள்!

## தொடரும் துர்மரணங்களை தவிர்க்க என்ன வழி?

தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களுக்குள் மட்டும் வெவ்வேறு மின்சார விபத்துகளால் ஐந்து யானைகள் உயிரிழந்துள்ளன. யானை - மனித மோதல், யானைகள் இறப்பு பற்றிய விவாதங்கள் தொடர்ந்து எழுப்பப்பட்டு வந்த நிலையில் சமீபத்திய துர்மரணங்கள் இதை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன. தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு தாலுகா மாரண்டஹள்ளி அருகேசக்தி என்பவருக்குச் சொந்தமான 22 ஏக்கர் தென்னந்தோப்பு உள்ளது. இதை முருகேசன் என்பவர் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வந்துள்ளார். வனப்பகுதியை ஒட்டிய இடம் என்பதால் தோப்பைச் சுற்றி மின்வேலி அமைத்துள்ளனர்.

கடந்த மார்ச் 7 ஆம் தேதி இவருடைய தோட்டம் அருகே வந்த மூன்று காட்டு யானைகள் மின்வேலியில் சிக்கி உயிரிழந்தன. இந்த விபத்தில் இரண்டு பெண் யானைகள், ஒரு மக்னா யானை பலியாகின. இரண்டு குட்டி யானைகள் தனித்துவிடப்பட்ட நிலையில் அவற்றை வனத்துறையினர் மீட்டனர்.

இந்த நிலையில் யானைகளின் தொடர் மரணங்கள் தொடர்பாகக் கவலை தெரிவித்த சென்னை உயர்நீதிமன்றம் மின்சாரம் பாய்ந்து யானைகள் உயிரிழந்த சம்பவங்கள் தொடர்பாக தலைமை வனப் பாதுகாவலர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைவர் ஆகியோர் நேரில் ஆஜராகி விளக்கமளிக்க வேண்டுமென உத்தரவிட்டுள்ளது.

**மின் வேலிகள் சட்டப்பூர்வமானதா?**

கோவை வனக்கோட்டத்தில் சமீப மாதங்களில் மின்வேலியால் அடிபட்டு யானை உயிரிழக்கும் சம்பவங்கள் நிகழவில்லை. மின் கம்பமே சரிந்து உயிரிழப்பது இதுதான் முதல்முறை. மின்வேலிகள் அமைப்பதற்கு அனுமதி கிடையாது. ஆனால் சிலர் யானை மீது உள்ள அச்சத்தால் மின்வேலிகள் அமைக்கின்றனர்.

அதற்கென சில விதிமுறைகள் உள்ளன. அதிகபட்சம் 12 வாட் திறன் கொண்ட சூரிய மின்சார வேலிகள் மட்டுமே அமைக்க வேண்டும். சட்டவிரோத மின்வேலிகள் பயன்பாட்டில் உள்ளதா என்பதை வனத்துறை



யினரும் மின்சாரத் துறையினரும் இணைந்து கண்காணித்து வருகிறோம். யானை நடமாட்டம், யானை வழித்தடம் அமைந்துள்ள பகுதிகளில் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை இணைந்து ஆய்வு மேற்கொண்டு வருகிறோம்," என்றார்.

கோவையில் யானை இறப்பைத் தொடர்ந்து கோவை மாவட்ட ஆட்சியர் தலைமையில் காவல் துறை மற்றும் வனத்துறை, மின்சாரத் துறை அதிகாரிகள் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அதில், "காடுகளை ஒட்டியுள்ள பகுதிகளில் தாழ்வான, பழுதடைந்த மின் கம்பங்களைச் சரி செய்யவும், உயர் மின் கம்பங்களை அமைக்கவும் மின் கம்பங்களைச் சுற்றி தடுப்பு வேலிகள் அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மின்வேலிகள் மற்றும் மின்கம்பங்களை ஆய்வு செய்ய மேற்கொள்ளப்படும் கூட்டுப்புலத்தணிக்கை தொடர்ந்து நடத்தப்படும். மேலும் 15 நாட்களுக்கு ஒருமுறை வருவாய் வட்ட அளவில் அரசு அதிகாரிகளுடன் கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது," என கோவை மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

வன ஆர்வலர் பாண்டியராஜன் பேசுகையில், "காட்டுயிர்கள் உயிரிழக்கும் செய்திகள் வருகின்றபோது அல்லது நீதிமன்றம் தலையிட்டு விசாரிக்கும்போது காட்டப்படும் தீவிரம் அதன் பிறகு இருப்பதில்லை.தென்காசியில் விவசாயி ஒருவர் காட்டுப்பன்றியைத் தடுக்க மின்கம்பத்திலிருந்து நேரடியாக மின்சாரத்தை இழுத்துள்ளார். ஆனால் துர்திருஷ்டவசமாக



அதில் அவரே அடிபட்டு உயிரிழந்துள்ளார். இது குறிப்பிட்ட ஒரு துறையின் தவறு என்று கூறிவிட முடியாது.

**அரசு என்ன செய்ய வேண்டும்?**

காட்டுயிர்களை எதிர்கொள்வதில் மக்களுக்கும் போதிய விழிப்புணர்வு தொடர்ந்து ஏற்படுத்தப்பட வேண்டும். இத்தகைய சூழ்நிலைகளில் வனத்துறையால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடிவதில்லை. வனச் சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும். மின்சாரத் துறை, வனத் துறை என எந்தத் துறையாக இருந்தாலும் அவர்கள் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இத்தகைய சம்பவங்கள் நிகழ்ந்தால் அரசு அதிகாரிகள் அதற்கு பொறுப்பாக்கப்பட வேண்டும்.

யானைகளின் போக்கை நாம் கட்டுப்படுத்த முடியாது. எனவே யானை வழித்தடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும். காட்டை ஒட்டிய இடங்களில் அமைந்துள்ள மின் அமைப்பு போன்ற கட்டுமானங்கள் விபத்துகளைத் தவிர்க்கும் வண்ணம் பலப்படுத்தப்பட வேண்டும்.

காட்டை ஒட்டியுள்ள நிலங்களில் யானைகளை ஈர்க்கும் பயிர்கள் தவிர்க்கப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட துறையின் பொறுப்பு என இதைத் தவிர்த்துவிட முடியாது. இதில் சம்மந்தப்பட்ட அனைத்துத் தரப்பும் இணைந்து பணி செய்தால்தான் எதிர்பாராத யானைகளின் மரணங்களைக் குறைக்க முடியும்," என்றார்.

தமிழ்நாடு முதன்மை வனப் பாதுகாவலர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி பிபிசி தமிழிடம் பேசுகையில், "யானைகள் இறப்பைத் தடுக்க பல கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். கோவையில் யானை மின் கம்பத்தில் மோதி உயிரிழந்தது. தர்மபுரியில் வனப்பகுதியிலிருந்து 60 கிமீ தொலைவில் ஓர் இடத்தில் மின் கம்பத்தில் மோதி உயிரிழந்தது. இவை இரண்டுமே விபத்துகள் தான். மின்வேலியில் யானை அடிபட்டு உயிரிழந்த சம்பவம்தான் குற்றம்.

சட்டவிரோதமாக மின்வேலியை அமைத்தவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மீது குண்டாஸ் சட்டம் போடப்பட்டுள்ளது. மின் கம்பங்களில் இருந்து சட்டவிரோதமாக மின் இணைப்பை எடுத்துப் பயன்படுத்துகின்றனர்.

இது மின்சார சட்டம் மற்றும் வனப் பாதுகாப்பு சட்டங்களின்படி குற்றம். பெரும்பாலான சம்பவங்களில் காட்டுப் பன்றிகளைத் தடுப்பதற்காக இதை வைக்கிறார்கள், அதனால்தான் உயரம் குறைவாக அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தத் தாழ்வான மின்வேலிகள், கம்பங்களில் எதிர்பாராத விதமாக யானைகள் சிக்கிக் கொள்கின்றன.

**வனத்துறையின் நடவடிக்கைகள் என்ன?**

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு மின்சாரத் துறை, வனத்துறை இணைந்து தொடர் கண்காணிப்பு மேற்கொண்டோம்.

அதில் பல இடங்களில் சட்ட விரோத மின்வேலிகள், தடுப்புகள் இருப்பது அறியப்பட்டு அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காடுகளை ஒட்டியுள்ள பகுதிகளில் யானை நடமாட்டத்தைக் கண்காணிக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

யானையின் வழித்தடங்களில் மின் விபத்துகளால் பாதிக்கப்பட சாத்தியமுள்ள இடங்களைக் கண்டறிந்துள்ளோம். அந்த இடங்களில் மின் கசிவை தடுக்கவும் அரண் அமைக்கவும் தேவைப்படும் இடங்களில் மின் கம்பங்களை நிலத்திற்கு அடியில் அல்லது உயர்மட்டத்தில் அமைப்பதற்கும் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

தலைமை செயலாளர் தலைமையில் மின்சாரத் துறை, வனத்துறை அதிகாரிகள் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மின் பரிமாற்றக் கோடுகளை மாற்றியமைப்பது அதிக பொருட்செலவு கொண்டது மற்றும் நீண்ட காலம் செய்யக்கூடியது. அதற்கான முன்மொழிவை வனத்துறை தரப்பிலிருந்து வழங்கியுள்ளோம்.

அதை நிறைவேற்றும் பொறுப்பு மின்சாரத் துறையிடம் உள்ளது. அதற்கான ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு கிடைத்த பிறகு அவை நிறைவேற்றப்படும்," என்றார்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் யானைகள் மரணம் தொடர்பான வழக்கின் அடுத்த விசாரணை வருகின்ற ஏப்ரல் 17ஆம் தேதியன்று நடைபெற இருக்கிறது.

– P. **அஷோக் குமார்**

# தாயை பழித்தாலும் தண்ணீரை பழிக்காதே...

## நீரின் அவசியம் பற்றி கூறும் முதல்வர்




நம்மைக்காக்கும் உயிர் நாடியான தண்ணீரை நாம் காக்க வேண்டும், தண்ணீரை வீணாக்கக் கூடாது,தண்ணீரை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும், தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்று உலக தண்ணீர் தினத்தை ஒட்டி முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள வீடியோவில் தெரி-வித்துள்ளார்.

உலக தண்ணீர் நாளை ஒட்டி முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள வீடியோவில், உயிர் வாழ காற்று எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு முக்கியமானது தண்ணீர், இந்த பூவுலகில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் அடிப்படை ஆதாரம் தண்ணீர். உலகம் எந்த அளவிற்கு உயர்ந்தாலும் மாறினாலும், மாறுதலை அடைந்தாலும் தண்ணீரின் தேவை மாறாது.

அதனால்தான் நீரின்றி அமையாது உலகு என்றார் ஐயன் திருவள்ளுவர். தமிழ் நிலமானது தண்ணீரை தனது பண்பாட்டுடன் சேர்த்து வளர்த்து வந்துள்ளது. தண்ணீர் என்று சொல்லாமல் அமிழ்தம் என்று சொன்னவர் திருவள்ளுவர். மனித உடலில் நீரின் அளவு கூடினாலும் குறைந்தாலும் நோய் ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார் வள்ளுவர். திருமந்திரமும், தேவாரமும், திருவாசகமும் தண்ணீரின் அவசியத்தை அழகு தமிழில் கூறியுள்ளது. நீர் நிலைகளின் அளவை குறித்து குளம், குட்டை, ஏரி, நீரோடை, ஆறு, அருவி, கடல் என்று பிரித்து பெயர் வைத்தவர்கள் தமிழர்கள்.

எல்லாமே நீர் உள்ள இடம்தான் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தன்மை கொண்டது. நீரின் தன்மைக்கேற்ப பெயர் சூட்டிய இனம் தமிழ் இனம். தாயை பழித்தாலும் தண்ணீரை பழிக்காதே என்று சொல்வார்கள். நமது உடலின் அனைத்து உறுப்புகளும் சரியாக செயல்படுவதற்கு தண்ணீர் மிக மிக அவசியம். உணவின்றி கூட பல நாட்கள் வாழ்ந்து விடலாம் தண்ணீர் இன்றி வாழ முடியாது. இத்தகைய உயிர் நாடியான தண்ணீரை நாம் காக்க வேண்டும்.

'உயிர் நாடியான தண்ணீரை நாம் காக்க வேண்டும், நம்மை காக்கும் தண்ணீரை வீணாக்கக் கூடாது,தண்ணீரை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும், தூய்மையாக வைத்திருக்க வேண்டும், மாசுபடாமல் காக்க வேண்டும். நீர் நிலைகளை தூர்வாரி வைத்திருக்க வேண்டும்.

இன்றைக்கு ஒரு நாட்டின் வளம் என்பது நீர் வளமாக, இயற்கை வளமாக கணக்கிடப்படும் சூழலுக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். புவி வெப்பமயமாதலில் இருந்து காப்பது தண்ணீர்தான். நீரில்லையேல் உயிர் இல்லை என்பதை உணர்ந்து தண்ணீரை காப்போம்.. தாய் நிலத்தை காப்போம் என்று குறிப்பிட்டுள்ளார் முதல்வர் ஸ்டாலின்.

**– தமிழ் வீரன்**

Printed by **NV SIVASHANKAR** and Published by **NV SIVASHANKAR** on behalf of PENA KURAL, Tamil Monthly and Printed at **J.M.PROCESS**, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002. And Published at No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078. Editor: **RATHIKA S.**


V.AYYANAR
9884166636
NO.3/885,PILLAYAR KOIL STREET
OMR, METTUKUPPAM
CHENNAI-600097
DEEPSHIKA AUTO WORKS
ALL KINDS OF TWO WHEELERS REPAIRING, WATER WASH SERVICE CENTRE
email: deepshikaautoworks@gmail.com


BM
Electrical, Plumbing
&
Air Conditioner Work
B. MANIKANDAN
9884555002
044 48612123
manikandanb2512@gmail.com
3/885, Pillayar Koil Street,
Mettukuppam, OMR, Chennai - 600097


S D A
வள்ளுவன் வாய்மை எப்படி பொய்த்து போகாதோ!
அதேபோன்று விலையும்! தரமும்!
உங்கள் ஸ்ரீதேவி ஏஜென்சிஸ் - ல் பொய்த்து போகாது!
பண்டிகைகால
அதிரடி ஆஃபர்களுக்கும் உண்டு...
ஸ்ரீதேவி ஏஜென்சிஸ்
Pay 50%
BALANCE AMOUNT
DAILY EMI
Wholesale Rate
Retail Shopping
0% Finance Available
Rs.12,999/-
Rs.999/-
Rs.3699/-
Rs.3999/-
Rs.6999/-
Rs.7999/-
Avail Offer Rs.1000/- Advance
MANUFACTURING &
WHOLESALE SUPPLIER
CONTACT
8939406206
No.5, Poonamalli High Road, Near MGR University, Maduravayal, Chennai - 600095.